# சைவநீதி

# SAIVANEETHI



மலர் 9 | இதழ் 8



ரூபா 25/=

# பொருளடக்கம்


பக்கம்

1. நலம் தரும் பதிகங்கள் ........................................ 2

2. கந்தபுராணம் பிறந்த கதை ........................................ 3

3. அருள் ........................................ 7

4. சோமாஸ்கந்தமூர்த்தி ........................................ 10

5. பிரபஞ்ச தாத்பரியம் ........................................ 13

6. விளக்கீடு ........................................ 16

7. குனிப்புடையான் ........................................ 17

8. தர்மமும் வாழ்வும் ........................................ 20

9. சிவப்பேறு அளித்திடும் பஞ்சாட்சர மந்திரம் ............ 23

10. சைவத்தின் மேன்மையும் சைவ வாழ்வும்................ 27



சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். - இதழ் நிர்வாகிகள்

உ
சிவமயம்

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

சைவநீதி
SAIVANEETHY

# சைவநீதி

மலர் 9 பார்த்திப - கார்த்திகை சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 08

**தொடக்குனர்:**

கலாபூஷணம், ஞானசிரோமணி, சைவப்புலவர்மணி, வித்துவான், திரு. வ. செல்லையா

**மதியுரைஞர்:**

சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்

திரு. D. M. சுவாமிநாதன்
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

திரு. அ. கந்தசாமி
*Chairman U.P.S.*

திரு. கு. மகாலிங்கம்

**பதிப்பாசிரியர்:**

திரு. வே. திருநீலகண்டன்
லக்ஷ்மி அச்சகம்

**விநியோகம்:**

திரு. க. சீனிவாசகம்
ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

**நிர்வாக ஆசிரியர்:**

திரு. செ. நவநீதகுமார்
30, ரம்யா றோட், கொழும்பு - 04.

தொடர்புகட்கு . *7.30 p.m. to 7.30 a.m.*
தொலைபேசி : 2580458

## இன்பம் எது?

இன்பத்தை விரும்பாத உயிர்களே இல்லை. எல்லோரும் அதாவது எந்தச் சமயத்தவராயினும் எந்த நாட்டவராயினும் இன்பம் பெற விரும்புவர். ஆனால் இன்பத்தை அடைகின்றவர்கள் மிகச் சிலர்தான். ஏன்? இன்பத்தை விரும்புகிறார்களேயன்றி இன்பத்தை அடையும் வழியைத் தெளிவாகத் தெரிகிறார்கள் இல்லை.

பலர் பொன்னாலும் பொருளாலும் இன்பம் அடையலாம் என்று அல்லும் பகலும் அயராது பாடுபட்டுப் பணத்தைத் தேடியும் அதன் பின்பும் துன்பப்படுகிறார்கள். மனைவி மக்களால் இன்பம் என்று சிலர் எண்ணுகிறார்கள். மனைவி மக்களால் துன்புறுவோரையும் காணக்கூடிய தாயிருக்கிறது.

**மதலையைப் பெறுநாள் துன்பம், வளர்த்திடு நாளுந் துன்பம் விதலைநோயடையில்துன்பம் வியன்பருவத்துந்துன்பம் கதமுறு காலர் வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம் இதமுறு பாலர் தம்மால் எந்நாளுந் துன்பமாகும்.**

பொன்னாலும் பொருளாலும் மனைவி மக்களாலும் மண்ணாலும் (நிலபுலங்கள்) இன்பம் இல்லை. எதனால் இன்பம்?

**'துன்ப மின்றித்துயரின்றி யென்றுநீர்
இன்பம் வேண்டி லிராப்பக லேத்துமின்'** என்பார் அப்பரடிகள்

எங்கே மனம் ஒடுங்குகிறதோ அங்கே இன்பம் விளைகிறது. தேவாரம் முதலிய அருட்பாக்களைப் பாடி மனத்தை ஒடுக்கினால் பேரின்பப் பெருவாழ்வு பெறலாம்.

# நலம் தரும் பதிகங்கள்

## பதிகம் 6

## குளிர் காய்ச்சல், வினையால் வரும் துன்பங்கள் நீங்க பாராயணம் செய்ய வேண்டிய பதிகம்

கொடிமாடச் செங்குன்றூரில் சம்பந்தப் பெருமான் அடியார்களுடன் தங்கி இருக்கும் சமயத்தில், அடியார்கள் குளிர் காய்ச்சலால் வருத்தம் அடைந்தனர். வினையால் வரும் இக்குளிர் காய்ச்சல் நோயிலிருந்து அடியார்களை விடுவிக்கப் பாடியருளிய பதிகம் இப்பதிகம். நோய்கள் எல்லாம் நாம் செய்யும் தீவினையால் வருபவையேயாகும். இப்பதிகத்தை அன்புடன் ஓதிவந்தால் தீவினையால் வரும் நோய்கள் நம்மைப் பாதிக்காது என்பது அனுபவத்தால் அறியலாம்.

**திருச்சிற்றம்பலம்**

**பொது** **பண் : வியாழக்குறிஞ்சி**

அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லும் அஃ.தறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்.
1

காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனி மனத்தால்
ஏவினையால் எயில் மூன்றெரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக்கொய்து மலரடி போற்றுதும் நாம் அடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்.
2

முலைத்தடம் மூழ்கி போகங்களும் மற்றெவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டெமை ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவை உடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம்.
3

விண்ணுலகாள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்று இருபோதும் தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்றுடையீர் உம் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்.
4

மற்றுஇணை இல்லா மலை திரண்டன்ன திண் தோளுடையீர்
கிற்றெமை ஆட்கொண்டு கேளாதொழிவதும் தன்மை கொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்து உம்திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம்.
5

மறக்கும் மனத்தினை மாற்றி எம்ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ் பிழையாத வண்ணம்
பறித்த மலர் கொடுவந்துமை ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்.
6-7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துன் கழலடிக்கே
உருகிமலர் கொடு வந்துமை யேத்தும் நாம் அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்த்து அருள் செய்தவரே
திருஇலித் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்.
8

நாற்றமலர்மிசை நான் முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றமுடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாம் அடியோம்
சீற்றமதாம் வினை தீண்டப்பெறா திருநீலகண்டம்.
9

சாக்கியப் பட்டும் சமண் உருவாகி உடை ஒழிந்தும்
பாக்கியமின்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம்.
10

பிறந்த பிறவியில் பேணி எம் செல்வன் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர்கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே.
11

**திருச்சிற்றம்பலம்**

# கந்தபுராணம் பிறந்த கதை

சிவ. சண்முகவடிவேல்

காமகோட்டம் என்னும் கற்கோவில் புகழ் பூத்த காஞ்சிப்பதியின் நடுவணாக அமைந்துள்ளது. காமகோட்டத்தில் கற்பிற் சிறந்த மலையரசன் மகளாராகிய உமாதேவியார் கருணையோடு வீற்றிருப்பார். உமையம்மையார் நாளிலும் பொழுதிலும் தவநெறியிலும் ஏகாம்பரநாதருக்கு ஆற்றுஞ் சிவபூசையிலும் நாளும் தவறாது ஒழுகி வருவார். காமகோட்டத்திற்கு ஒரு சாராகக் குமரக்கோட்டம் என்று ஒரு ஆலயம் உளது. குமரகோட்டத் திருக்கோயில் ஒளி மிகுந்தது.

குமரகோட்டக் கோவிலில் குமாரக் கடவுள் குடிகொண்டருள்வார். குமாரக் கடவுள் சிவபெருமானுடைய திருக்குமாரர் . சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணினின்றும் தோற்றிய ஆறு அக்கினிப் பொறிகளில் அவதரித்தவர். சரவணப் பொய்கையில் போந்தமையால் சரவணபவன் என்றானார். கார்த்திகைப் பெண்கள் காதரித்தமையால் கார்த்திகேயன் என்றானார். கங்கை தாங்கியமையால் காங்கேயர் என்பார். ஆறுமுகப் பிரானார் தூய்மை மிக்க வெற்றி வேலாயுதர். அசுரர்க்கு முதல்வனாகிய சூர்பன்மனைச் சங்காரஞ் செய்தார். குன்றம் எறிந்த குமரன் அமரர் களுடைய அருஞ் சிறையை அகற்றினார். தேவசேனாதிபதி இந்திரனை மீளவும் சுவர்க்கலோகாபதி ஆக்கி அருள் புரிந்தார்.

குமர கோட்டத்தில் கோவில் கொண்டருளும் குமாரசுவாமிக் கடவுள் திருப்ரங்குன்றத்தில் உறையும் உரித்துடையார். திருப்பரங்குன்றம் மதுராபுரியின் மேற்குத் திசையில் அமைந்துள்ளது. திருமுருகன் திருச்சீரலைவாயில் நிலைத்திருப்பது அவர் பண்பு. செவ்வேல் பெருமான் திருவாவினன் குடியில் அசைவற்று மருவுவார். செவ்வேள் சேஎய் திருவேரகத்தில் சிறப்புடன் திகழ்வார். கடம்பமர் காளை திருத்தணியில் செருத்தணிந்து உறைவார்.

இன்னும் என்றும் இளமையும் அழகும் குன்றுதலில்லாத குன்றம் பிளந்த குமரன் மலைகளிலும் குன்றுகளிலும் வாவிகளிலும் சோலைகளிலும் மலர்க்காவுகளிலும் சந்திகளிலும் சதுக்கங்களிலும் ஏனைய கவின்மிகு கலைக்கூடங்களிலும் செம்மல் உள்ளங்களிலும் கோயில் கொண்டு உறைவார்.

**மேவருங் கூடல் மேலை**
**வெற்பினில் அலைவாய் தன்னில்**
**ஆவினன் குடியி னல்லே**
**ரகந்தனிற் றணிகை யாதிப்**
**பூவுல குள்ள வெற்பிற்**
**பொற்புறும் ஏனை வைப்பிற்**
**கோவில் கொண் டருளி வைகுங்**
**குமரகோட் டத்து மேலோன்**

- கந்தபுராணம் -

கந்தசுவாமிக் கடவுள் தேவேந்திரன் உலகத்தில் தங்கியிருப்பார். திருமால் உலகத்திற்கு அப்பாலுள்ள தமது கந்த உலகத்தில் காதலித்திருப்பார். தேவர்கள் போற்றுங் கந்த மலையிலும் விரும்பி எழுந்தருளி வீற்றிருப்பார். அதே போலக் காஞ்சியம் பதியிலுள்ள குமரகோட்டத்திலும் விருப்பினுடன் குடி கொண்டருளுவார். குமரப் பெருமான்.

குமரகோட்டத்தில் கோவில் கொண்டிருக்கும்

---

**அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க**
**இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகு வார்** 691

வலிமையுள்ள அரசரைச் சார்ந்து வாழும் அமைச்சர் முதலியோர் அவரிடமிருந்து மிகவும் நீங்காமலும், அவரோடு மிகவும் நெருங்காமலும் தீயருகே குளிர் காய்பவர் போல இடைப்பட்ட இடத்தில் நிற்பதும், இருப்பதும் வேண்டும்.

சமரசூரபன்மனைத் தடிந்த செவ்வேள் பெம்மான், பூவுலகம் முழுவதையும் வாழ்விப்பார். முடிவற்ற வானுலகம் முழுவதையும் வாழ்விப்பார். இந்திரனைச் சிறப்புற வைப்பார். பிரமதேவர் முதலாகிய அமரர்கள் வாழச் செய்வார். பிறத்தலும் இறத்தலும் இல்லாத வீட்டின்பத்தை விரும்பி னோர்க்கு ஈவார். தம்மைச் செம்மல் உள்ளத் தோடு சேவிப்பவர்களுக்கு வேண்டும் விருப்புக் களை வேண்டிய வண்ணம் வழங்குவார்.

மேலண்டத்தை அளாவிய மதிலாற் சூழப்பட்ட குமர கோட்டத்தில் வீற்றிருக்கும் கந்தவேள் பெம்மான் முன்னாளில் படைப்புத் தொழிலைப் பரிபாலித்தார். முருக மூர்த்தி உருத்திராக்க மாலை அணிந்தார். நீர்க்க மண்டலத்தைத் திருக்கரத்தில் தாங்கினார். பிரமதேவர் பிரணவப் பொருள் அறியாமை யினால் அவரைச் சிறையில் அடைத்தார். பரம் பொருள் சேய் படைத்தருள் வேடம் பூண்டார். அமரர்கள் அனைவரும் துதிக்க அனேக யுக காலம் சிருட்டித் தொழிலை ஆற்றி அமர்ந்திருந்தருளினார். ஆறுமுகப் பிரானார்.

அத்தன்மைத்தான காஞ்சியம்பதியில் பிரமதேவர் தம்முடைய மனமாசு நீக்க விரும்பினார். விஷ்ணு மூர்த்தி முன்னாளில் ஆமை வடிவமாக அமர்ந்து சிவபூசை புரிந்த கச்சபாலயத்தில் சிவபெருமானைப் பூசனை புரிந்தார். பிரமதேவர் சரசுவதி தேவியுடன் கச்சபாலயத்தில் அமர்ந்திருந்தார்.

அந்நாளில் பூவுலகத்திலிருந்த முனிவர்கள் அனைவரும் இல்லறத்தை ஆற்றினார்கள். நல்ல பலவகைத் தவங்களையும் முனிவர்கள் செய்வதற்கு முயன்றார்கள். முனிபுங்கவர்கள் கச்ச பாலயத்திற்கு வருகை தந்தார்கள். அனை வரும் தாமரைப் பொருட்டின் மீது வீற்றிருந்த பிரமதேவருடைய பொன் போன்ற திருவடியை வணங்கிப் போற்றினார்கள். முனிவர்கள் பிரம தேவருடைய முகத்தை நோக்கிப் பின்வருமாறு முறைப்பாடு செய்தார்கள்.

"ஐயனே! கேட்டருள்க! அடியேங்கள் இது நாள் வரை இல்லறத்தை இயற்றினோம். பூவுலகத்தி லுள்ள நகரங்கள் எங்கும் சென்று தங்கினோம். யாங்கள் இனிச் சித்த விருத்தி ஒடுங்கத் தவம் புரிய விரும்புகின்றோம். அதற்குரிய இயல்முறை வழுவாது வாழ்க்கையை நடாத்த விரும்பு கின்றோம். நமக்கு நன்கு பொருத்தமான மெய்ம்மையான ஒரு தபோவனத்தைச் சொல்லுங்கள்." என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

முனிவரர்கள் முன்னியதைப் பிரமதேவர் உன்னிப் பார்த்தார். பின்பு ஒரு தருப்பையைக் கரத்தில் எடுத்தார். தருப்பையை ஒரு சக்கரமாக வளைத்தார். வளைத்த சக்கரத்தை விரைவில் பூமியில் உருட்டி விட்டார். சக்கரம் உருண்டு சென்றது.

பிரமதேவர் முனிவர்களைப் பார்த்து மொழிந்தார். "முனிவர்காள்! நீங்கள் அனைவரும் இப்பொழுது உருட்டிவிட்ட தருப்பை நேமியின் பின்னாகத் தொடர்ந்து செல்லுங்கள். சக்கரம் தரிக்கும் வனத்தில் உங்கள் நிலையான வாழ்வைத் தொடங்கு வீர்கள்." என்றுரை செய்தார் பிரமதேவர்.

முனிவர்கள் பிரமதேவருடைய வார்த்தையை ஏற்றுக் கொண்டார்கள். அவருடைய சிவந்த பாதங்களை உவந்து வணங்கினார்கள். அவரிடத்தில் விருப்பத்தி னோடும் விடையினைப் பெற்றுக் கொண்டார்கள். முனிவர்கள் சக்கரத்தின் பின்னாகத் தொடர்ந்து சென்றார்கள்.

தருப்பையாலான சக்கரம் விரைந்து ஏகியது ஒரு ஒப்பற்ற வனத்தில் ஓய்ந்து நின்றது. பெருந்தவ

> **மன்னர் விழைப விழையாமை மன்னரான்**
> **மன்னிய ஆக்கம் தரும்** 692
>
> தம் அரசர் விரும்புகின்றவைகளைத் தாம் விரும்பாமல் இருத்தல், அவ்வரசர் வாயிலாகவே தமக்கு நிலையான ஆக்கத்தைக் கொடுக்கும்.

முனிசிரேட்டர்கள் நாங்கள் தங்கு மிடம் இதுவே என்று எண்ணங் கொண்டார்கள். முனிவர்கள் அனைவரும் அந்த வனத்தில் தங்கி இருந்தார்கள்.

அந்த வனம் நேமி தரித்தலால் நைமி சாரணியம் என்று ஓர் பெயரைப் பெற்றுக் கொண்டது.

நைமிசாரணியத்தில் வசிக்கும் தூய முனிவர்கள் அனைவரும் சொல்லரும் தவத்தை ஆற்றினார்கள். மேன்மை கொள் வைதீக மார்க்கத்தில் நின்று ஒழுகினார்கள். சிலநாள் செல்ல அனைத்து முனிவர்களும் ஓர் யாகத்தைச் செய்தார்கள்.

யாகத்தின் பயனாக முனிவர்கள் தமக்குள்ளே பொருந்திய கரணங்கள் நான்கும் அடங்கி ஒடுங்கியது. களங்கமற்ற அறிவைப் பெற்றார்கள். தவசிகள் எல்லோரும் மாறுபாடில்லாத மனத்தோடும் வனத்தில் வதிந்திருந்தார்கள். அப்போது சுகப்பிரம முனிவரைப் போன்ற அறிவிற் சிறந்த சூதமகா முனிவர் அதனைத் தேர்ந்தார். தாமாகவே முனிவர் அவ்வனத்திற்கு வந்து சேர்ந்தார்.

முனிசிரேட்டர்கள் ஆங்கு வந்த எல்லா நூல்களையும் கற்றுணர்ந்த சூதமா முனிவரைக் கண்டார்கள். மகிழ்ச்சி கொண்டார்கள் விண்டார்கள் கண்ணீர். முனிவருக்கு முன்னே சென்று முனிவர்கள் வணங்கினார்கள்.

"சுவாமி! இன்று எம்மிடத்தில் வரபெற்றதால் இன்றைய தினம் நமக்குச் சிறந்த நன்னாள். பொன்னாளாகும். நலம் இணைந்த நன்னாளேயாகும். "என்று இனிய உபசார மொழிகளைத் தித்திக்கும் தேன் மழையாக வாரி வழங்கினார்கள்.

தழைகளாலும் தருப்பைப் புற்களாலும் பொதியப் பெற்ற தமது ஆச்சிரமத்திற்குச் சூதமாமுனிவரை அழைத்துச் சென்றார்கள் ஆச்சிரமத்தின் நடுவனாக முனிவர்கள் ஓர் நல்லாசனத்தை நல்கினார்கள். சூதமுனிவரை ஆசனத்தின் மீதாக அமர வைத்தார்கள். அருக்கியம் முதலானவற்றை அன்போடு அளித்தார்கள்.

முனிசிரேட்டர்கள் யாவரும் சூதமா முனிவரைச் சூழ்ந்து இருந்தார்கள். பின்பு முனிவர்கள் முனிவரைப் பார்த்து முறைப்பட மொழிந்தார்கள்.

"முனிவரே! நாம் எல்லாரும் முன்னொரு நாளில் பிரமதேவருடைய ஆஞ்ஞையால் அரிய இவ்வனத்தில் வந்து இருந்தோமாக. எங்கள் செய்தவம் முனிவரைக் கண்ணெதிரே தரிசிக்க வைத்தது. அதனால் யாங்கள் இது நாள் வரையில் ஆற்றிய நோன்பின் பேற்றை அடையப் பெற்றவர்களானோம். மனத்தில் மகிழ்ச்சி உற்றோம் எங்களுடைய இந்தப் பிறவி, பயனைப் பெற்றது." என்று எடுத்து ஏத்தினார்கள்.

**முந்தொரு ஞான்று தன்னில்**
**முளரியந் தேவன் சொல்லால்**
**வந்திவ ணிருந்தே மாக**
**மற்றியாம் புரிந்த நோன்பு**
**தந்தது நின்னை யற்றாற்**
**றவப்பயன் யாங்கள் பெற்றோஞ்**
**சிந்தையி னுவகை பூத்தேஞ்**
**சிறந்ததிப் பிறவி யென்றார்**

(கந்த புராணம்)

சூதமா முனிவர் அவ்வார்த்தை கேட்டு ஓதுகின்றார்.

"முழுமுதற் செம் பொருளாம் எம்பிரான்

**போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்**
**தேற்றுதல் யார்க்கும் அரிது** 693

அமைச்சர் தம்மைக் காத்துக் கொள்ள விரும்பினால், கடும் பிழைகள் தம்மேல் வராமல் காத்துக் கொள்ள வேண்டும். அவை நிகழ்ந்தனவாகக் கேள்விப்பட்டு அரசர் ஐயுற்ற பின் அவரைத் தெளிவித்தல் எத்துணைச் சிறந்தவர்க்கும் அரிதாம்.

சிவபரம் பொருளைத் துதித்தீர்கள்! நிலை பெற்ற வேள்வியை வேட்டீர்கள். மனம் பரிசுத்தரானீர்கள். மெய்ஞ்ஞான அறிவு சேரப் பெற்றீர்கள் சற்சங்கத்தினராகிய உங்கள் கூட்டத்தைக் காண்டலும். கலந்து உரையாடு வதும் எம்மைப் போன்றவர்களுக்கு இப் பிறவியில் பெறுதற்கரிய பெரும்பேறு அன்றோ!" என்று சூத முனிவர் எடுத்து இயம்பினார்.

அதனைச் செவிமடுத்த முனிவர்கள் செப்புவார்கள் "அரிய வேதங்களை ஓதாது உணர்ந்த வியாச முனிவருடைய நல்ல மாணாக்கருள் நல்லவரே! சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல் செவ்வேள் சேஎயினுடைய மகிமை வாய்ந்த மாண்கதையை அறியும் பெருவிருப்பத்தை நீண்ட நாட்களாகக் கொண்டுள்ளோம். எங்கள் எண்ணம் நிறைவெய்தும் வண்ணம் கந்தன் கதையினைக் கட்டுரைசெய் பெரியோய்!" என்று ஆங்கு சூழ்ந்திருந்த முனிவர்கள் சூதமா முனிவரிடத்தில் விண்ணப்பஞ் செய்தார்கள்.

சூதமா முனிவர் நைமிசாரணியவனத்து முனிவர்கள் வேண்டுதலை விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டார். கந்தன் காதை என்றதும் முனிவருடைய உள்ளம் உருகியது. பெரு மகிழ்ச்சி பெருகியது. பரவச நிலையரானார். உடம்பிலுள்ள மயிர்க்கால்கள் கூச்செறிந்தன. மெய் சிலிர்த்தது. புளங்காங்கிதமுற்றார். முனிவருடைய இரு கண்களில் நின்றும் அருவி பெருகியது. தம்முடைய குருவாகிய வியாச முனிவருடைய மெய்ம்மையான வடிவத்தை மெய்யில் கண்டு தியானித்தார். கைகளைக் கூப்பி அஞ்சலி செய்து குரு வணக்கம் செலுத்தினார். பின்னர் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்.

அரசனுடைய அரும் புதல்வன், ஆசானுடைய அன்புப் பிள்ளை, தன்னுடைய தனயன், சொல்வதை நன்கு கிரகிப்போன், பொருள் கொடுப்பவன், குரு பக்தியில் சிறந்தவன். ஆகிய இந்த மாணாக்கர்களுக்குப் போதிப்பது ஏனைய நூல்கள். உங்களைப் போன்று சன்மார்க்க நெறியைக் கடைப்பிடித்து நிற்பவர் களுக்கே புராணம் முழுவதையும் புகல்வேன்.

**மன்னவன் மதலை யாசான்**
**மாமகன் றனது மைந்தன்**
**பன்னுசொற் கொள்வோன் ஈவோன்**
**வழிபடு பண்பின் மிக்கோன்**
**என்னுமிங் கிவருக் கீவ**
**தேனைநூல் உங்கள் போலச்**
**செந்நெறி யொழுகு வார்க்கே**
**செப்புவன் புராண முற்றும்**

(கந்த புரணாம்)

என் சொன்ன சூத முனிவர் மேலும் தொடர்ந்து சொல்லுவார்.

"தம்மை ஒப்பவர் பிறர் ஒருவர் இல்லாத சண்முகப் பெருமானிடத்தில் அன்பு சார்ந்த முனிவர்காள்" உரைப் போரும் கேட்போரும் வீட்டின்பம் எய்துவதற்கு ஏற்ற கந்த புராண மெய்ம்மைக் காதையைக் கூறுமாறு கேட்டீர்கள்.

"யான் இப்போது கந்தன் கதையைக், கட்டுரை செய்யத் தொடங்குவேன். புலனைப் புறவழியில் செல்ல ஒட்டாது போற்றுங்கள். கந்தன் மீது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிச் செவி மடுத்துக் கேளுங்கள்.

என்று சூதமா முனிவர் கட்டுரைத்தார். முனிவர்கள் அழலிடைப் பட்ட மெழுகென உள்ளம் உருகிக் கேட்டார்கள். சூதமகா முனிவர் கந்தபுராணத்தை விரித்துரை செய்ய ஆரம்பித்தார்.

**செவிச் சொல்லும் சேர்ந்த நகையும் அவித்துஒழுகல்**
**ஆன்ற பெரியார் அகத்து** **694**

வலிமை நிறைந்த பெரியோர் அருகில் இருக்கும் போது, அவர் காண ஒருவர் காதுக்குள் மெதுவாகச் சொல்லுதலையும் பிறரோடு கூடிச் சிரித்தலையும் அடியோடு விட்டு விட வேண்டும்.

# அருள்

டாக்டர் . க. வேலாயுதபிள்ளை

அருள் என்பது எவ்விதத் தொடர்புமின்றி இயற்கையாகவே எல்லாவுயிர்களிடத்தும் நிகழும் இரக்கம். இச் சொல் அன்பு என்ற சொல்லினும் வேறுபடும். தன்னோடு தொடர் புடைய ஒருவர் மேல் தோன்றும் இரக்கமே அன்பு. எனவே அருளுடமை அன்புடைமையிலும் மேலானது. முன்னம் அறிந்த ஒரு உயிர்க்கு உதவுஞ் செயல் அன்பு. ஒரு பொழுதும் அறியாத உயிருக்கு உதவுதல் அருள். அன்பு நேரடிப் பழக்கத்தால் வளரலாம். அருளோ ஒருவருடைய இயற் பண்பினுள் வளர வேண்டியது. 'அருட் செல்வம் செல்வத்துட் செல்வம் பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள' என்றார் திருவள்ளுவர்.

செல்வங்கள் பலவற்றுள்ளும் ஆராய்ந்து எடுக்கப்பட்ட செல்வமாவது அருளான் வரும் செல்வம். பொருட் செல்வம் இழிவான மக்களிடமும் இருக்கத்தக்கதாகும்.

நமக்குத் துன்பம் நேரும் போது நாம் வருந்துகின்றோம். நம்மைப் படைத்த இறைவனையும் நோகின்றோம். எல்லாவு யிர்க்கும் அருள் மாரி பொழியும் அம்பலக் கூத்தன் நமக்கு மட்டும் ஏன் அருளாதொழிந்தன். இதற்குக்காரணம்தான் ஏதோ? முன் பிறவியிற் பிற உயிர்கட்கு இரங்காது துன்பஞ் செய்தோமோ! நம் துயரை நீக்குவதற்கு எம்மைப்போல் இறைவனாற் படைக்கப்பட்ட மக்களுள் யாரும் இல்லையா, யாருடனானினிப் புகல்வேன். எம் துயர் தீர இறை அருள் பெற்ற மக்கள் யாரும் முன் வாரார் என வருந்துவோம். பலவாறும் நம் இடர் கெட உபாயம் எண்ணுவோம். இவ்வாறே அல்லற்படும் ஒவ்வோருயிரும் வருந்தும் என எண்ணி தமக்குறும் இன்னலையுங் கருதாது மன்னுயிர் ஒப்புவோரே அருளாள்வாராவர்.

மன்னுயிர்க் கிரங்கும் பேரெண்ணம் மனிதருக்கு இலகுவாக அமைவதில்லை. அது பயிற்சி வழியிலேயே அமைவதாகும். அருட் குணமும் நற் செய்கையும் உடையாரோடு பழகி வருவோமாயின் நாமும் அருட் குணமும் நற் செய்கையும் உடையோராய் திகழ்வோம்.

அருட் குணத்தைத் தமதாக்கிப் பிறழாது ஒழுகவல்ல ஒருவரிடம் இறைவனின் பேரருள் ததும்பி வழியும். தனக்குவமையில்லா அப்பரம் பொருளின் அருள் இவ்வாறு கிட்டும்போது நோய் கவலை துன்பம் முதலிய இருள்கள் புண் நுனிப் பனிபோல் அகலும் இதுவே

**'அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை யிருள் சேர்ந்த இன்னா வுலகம் புகல்'** என்ற பொய்யா மொழி கூறுவது **'கொல்லா விரதங் குவலயமெல்லா மோங்க எல்லார்க்குஞ் சொல்லுவதெ னிச்சை பராபரமே'** என அருளிய தாயுமான சுவாமிகள்

**எப்பொருளும் ஓரார் தொடரார்மற்று அப்பொருளை**
**விட்டக்கால் கேட்க மறை** **695**

அரசன் பிறரோடு மறைபொருள் பேசும்போது அதில் எந்தப் பொருளையும் செவி சாய்த்து உற்றுக் கேளாமலும், அவனை அணுகி வினவாமலும் இருந்து, பின் அம் மறைப் பொருளை அடக்கி வைக்காமல் அவனே வலிய வந்து சொன்னால் அமைச்சர் முதலியோர் கேட்டறிய வேண்டும்.

**'எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின் தெய்வ வருட் கருணை செய்யாய் பராபரமே'** என்றும்

**'தம்முயிர்போ லெவ்வுயிருந் தானென்று தண்ணருள் கூர் செம்மையருக் கேவலென் செய்வேன் பராபரமே'** என்றும் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

"அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்."
ஆருயிர்கட் கெல்லா நானன்பு செயல் வேண்டும். என அருட் சோதி வள்ளல் இராமலிங்க சுவாமிகளும் இவற்றையே வேண்டி நின்றார். வள்ளலாரின் அருளாள்கை.

**'வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்**
**வாடினேன் பசியினா லிளைத்தே**
**வீடுதோ றிரந்தும் பசியறா தயர்ந்த**
**வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்**
**நீடிய பிணியால் வருந்துகின் றோரென்**
**னேருறக் கண்டுளந் துடித்தேன்**
**ஈடின் மா னிகளா யேழைக ளாய்நெஞ்**
**சிளைத்தவர் தமைக்கண்டே யிளைத்தேன் '**

என்ற அவர்களின் உள்ள உணர்வை வெளியீட்டிய அருட்பாவால் அறிய முடிகின்றது. தாயுமான சுவாமிகளும் அருட்சோதி வள்ளலாரும் இறைவனிடம் வேண்டியவை யெல்லாம் அருள் வழி நிற்கும் அருளே!

இத்தகைய அருள்வழி நிற்க விழைந்தோரின் வழித்தோன்றல்கள் நாம், அவர் வழி எம் வழியாகக் கொள்ளும் நாள் தான் எந்நாளோ?

இறைவன் பல்வேறு விதமான உயிரினங்களைப் படைத்ததன் நோக்கமே ஒன்றுக்கொன்று பயனுடையனவாய் இருக்க வேண்டும் என்னும் பேரிரக்கத்தாலேயே. ஆண்டவன் படைப்பில் அனைத்து உயிர்வாழ்வனவும் சமமானவையே. ஓருயிர் மேலும் வெறுப்புறாது இரங்குவது நம் கடனாகும். மிகப் பழைய தமிழ் நூலாகிய பத்துப் பாட்டுள்

**'வானம் வாய்த்த வளமலைக் கவா அன்**
**கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய**
**அருந்திற வணங்கின் ஆவியர் பெருமகன்**
**பெருங்கடல் நாடன் பேகனும்'** என்று குளிரால் நடுங்கிய மயிலுக்குத் தன் போர்வையை நல்கிய பேகனின் அருளுடமையும்
**'சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிப்**
**பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரற்**
**பறம்பிற் கோமான் பாரியும்'** என்று கொம்பரில்லாக் கொடிபோல் அலமந்து நின்ற முல்லைக் கொடிக்குப் படரும் பொருட்டுத் தன்தேரை வழங்கிய பாரியும் புகழப்பட்டமை அறிய வேண்டும். ஓரறிவுயிர்க்கும் உறுதுயர் களைந்து அருளுடையராதல் நம் மூதாதையரின் பண்புசால் வாழ்வில் அமைந்தன என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் ஈந்த பேருளாளர் பரம்பரையினர் நாம் என்று பெருமையாகக் கூறுவதுடன் நின்று

**குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்புஇல**
**வேண்டுப வேட்பச் சொலல்** **696**
அமைச்சர் முதலியோர் அரசனுக்குச் செய்தியைச் சொல்லும் போது, அவனது உள்ளக் குறிப்பை அறிந்து சொல்வதற்கு ஏற்ற காலத்தையும் எதிர்நோக்கி, அவனுக்கு வெறுப்பில்லாதவற்றையும் வேண்டியவற்றையும் அவன் விரும்புமாறு சொல்ல வேண்டும்.

விடாது அவ்வழி நிற்றலும் நம் கடனன்றோ!

**'புள்ளுறு புன்கண் தீர்த்த, வெள்வேல் சினங்கெழு தானைச் செம்பியன் மருக!** எனப் புறநானூற்றில் கிள்ளி வழவன் என்னுஞ் சோழ வரசனை மற்றோக்கத்து நப்பசலையார் பாடும் பொழுது புறாவுக்கு உற்ற துயரைத் தீர்க்கும் பொருட்டுத் துலைபுக்க அருளாளனாம் சிபிச் சக்கரவர்த்தியின் வழித் தோன்றலை வருணிக்கின்றார்.

**'முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய**
**மூர்க்க னாகிக் கழிந்தன காலம்**
**'சிந்தித்தே மனம் வைக்கவும் மாட்டேன்**
**சிறுச் சிறதே இரப் பார்கட் கொன்றீயேன்**
**அந்தி வெண்பிறை சூடும் எம்மானே**
**ஆரூர் மேவிய அமரர்கள் தலைவா**
**எந்தை நீ எனக் குய்வகை அருளாய்**
**இடைமருதுறை எந்தை பிரானே,'** எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனை வேண்டினார்.

இந்தப்பிறப்பில் உண்ண உணவும் உடுக்க ஆடையுமின்றி அலைந்து திரியும் மக்களை, முற்பிறப்பில் உயிர்களிடத்துச் செய்ய வேண்டிய அருளைத் தவிர்த்துத் தவிர்க்கவேண்டிய கொடுமைகளைச் செய்து ஒழுகினவர்கள் என்பர் ஆன்றோர்.

**'செய்தீவினை யிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்தவருமோ இரு நிதியம் - வையத்து அறும் பாவ மென்ன அறிந்து அன்றிடார்க்கு இன்று வெறும் பானை பொங்குமோ மேல்'** என்ற ஆன்றோர் வாக்கும் நினைவில் வரவேண்டும். எனவே அருள் என்னுந் துணையையன்றிப் பிற துணை நமக்கில்லை.

**'நல்லாற்றான் நாடி அருள் ஆள்க பல்லாற்றான் தேரினும் அஃதே துணை'**

நன்றான நெறியிலே நின்று நமக்குத் துணையாம் அறம் யாதென்று ஆராய்ந்து அருளுடையவர் ஆகுக. பல்வகைச் சமய நெறிகள் மூலமும் ஆராய்ந்தாலும் எமக்குத் துணையாவது அருள் ஒன்றே. எச் சமயத்தோர் சொல்லுந் தீதொழிய நன்மை செயல் என்பதையே கூறுவன. சிவபெருமான் எல்லா உயிரினத்திலும் நம் அருளைப் பாவிப்பவர். என்பதை நாமறியும் பொருட்டே தாயை இழந்த பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்த கதை நமக்குத் தெரியத்தந்தனர் ஆன்றோர். நாம் அருட்பெருங் கடலான ஆண்டவனின் அருளைப் பெற வேண்டுமானால் அவனைப் போல் நாமும் எல்லாவுயிர்களிடத்தும் அருளுடையராய் நடத்தல் இன்றியமையாத கடமையாம் மன்னுயிர்கட்கு அருள் புரியாத ஒருவனின் அறத்தை ஆராயும் பொழுது ஞானமில்லாதவன் மெய்ப்பொருளை உணர்தர்க்கு ஒப்பாகும்.

**'தெருளாதான் மெய்ப்பொருள் காண்டற்றல் தேரின் அருளாதான் செய்யும் அறம்.'**

---

**வேட்பன சொல்லி வினைஇல எஞ்ஞான்றும்**
**கேட்பினும் சொல்லா விடல்** 697

பெரும் பயன்படுவனவும் அரசன் விரும்புவனவுமான செய்திகளை அவன் கேட்காவிட்டாலும் சொல்லி, எப்போதும் வினைக்கு உதவாத வீண் செய்திகளை அவன் கேட்டாலும் சொல்லாது விட வேண்டும்.

# சோமாஸ்கந்தமூர்த்தி

B.S. சர்மா

சைவம் கூறும் உயர் தத்துவங்கள் மூன்று. அவை சிவ தத்துவம், சுத்த சிவதத்துவம். மகேச தத்துவம் என்பன. இவற்றுள் சிவ தத்துவம் நிஷ்கள நிலைப்படுவது. இரண்டாவது நிஷ்கள நிலையினது. மூன்றாவதாக மகேச தத்துவத்தின் நிலை சகள நிலை. நிஷ்கள நிலை பெயர், உருவம், குணம், குறி யாவுமற்ற நிலை. மகா சங்கார காலத்தில் ஆன்மாக்களின் மல நீக்கத்தின் பொருட்டு சுத்த தத்து வங்களைத் தோற்று விப்பதற்காக ஐந்து சக்திகள் தோற்றின. எல்லையற்ற கருணையங் கடலான சிவத்தின் ஆயிரத்தில் ஒரு பங்கு பராசக்தியாக வெளிப்பட்டது. இதில் ஆயிரத்தில் ஓரம்சமாக முறையே இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்பன தோற்றின. பராசக்தி சாந்தியதீத சக்தி எனவும், ஆதி சக்தி சாந்தி எனவும், இச்சா சக்தி வித்யா சக்தி எனவும், ஞானசக்தி பிரதிஷ்டா சக்தி எனவும், கிரியாசக்தி நிவிருத்தி எனவும் சாஸ்திரங்களிற் சுட்டப் பெறுவன. இவ்வைந்து சக்திகளிடமிருந்தும் ஐந்து சதாசிவ தத்துவங்கள் பிறந்தன. இவை சாதாக்கியங்கள் எனப் பெயர் பெறுவன. பராசக்தியின் பத்தில் ஓரம்சத்திலிருந்து சிவ சாதாக்கியமும், அவ்வாறே இச்சாசக்தி யிலிருந்து மூர்த்தி சாதாக்கியமும், ஞான சக்தியிலிருந்து கர்த்திரு சாதாக்கியமும் கிரியா சக்தியிலிருந்து கர்ம சாதாக்கியமும் தோன்றின.

கர்ம சாதாக்கியத்திற்குரிய ஈசனிடமிருந்து மகேசுவரர் தோன்றினார். இவர் சிருட்டி, திதி, சங்காரம் ஆகிய முத்தொழில்களை நிகழ்த்துபவர். இவர் சகள? நிலைப்படுபவர். மகேசுவர மூர்த்தியே ஆன்மாக்களுக்கு அருள் சுரக்கும் வண்ணம் பல தோற்றங்களில் தோன்றி யருள்பவர். இத்தோற்றங்களில் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு திருவிளையாட்டாக நிகழ்த்தப்பட்ட நிகழ்ச்சிகள் பல. இவைகள் விலைகள் எனவும் கூறப்படுவன. இவற்றின் போது இறைவன் அமர்ந்த கோலத்தில் அமைந்த தோற்றங்கள் சில. சில நின்ற திருக்கோலத்தின. சில ஆடல் புரியும் நிலையின. சில ஊர்தியான விடையில் இவர்ந்த வனப்பின. சில பயம் விளைவிப்பன. சில அமைதி பெருக்கும் சாந்தம் பொலிய விளங்குவன.

மகேச மூர்த்திக்கு ஒரு திருமுகமும், முக்கண்களும், சடா மகுடமும் நான்கு கரங்களும் உரியன. பத்மாசனத்தில் நின்ற கோலத்தில் தோற்றம் பெறும் இம் மூர்த்தியின் பின் இரு கரங்களிலும் மானும் மழுவும் விளங்குகின்றன. முன்னிரு கரங்களும் அபய வரத நிலையின. மகேச மூர்த்தியை முதலாகக் கொண்டே லீலா மூர்த்திகள் விரிந்தன. இவை சந்திர சேகரர் முதலான சோமாஸ்கந்த மூர்த்தி உட்படும் இருபத்தைந்து மூர்த்திகளாம்.

சிருஷ்டியைச் சுட்டி நிற்கும் அர்த்த நாரீசுவரர், கல்யாண சுந்தரர் போன்ற

**இளையர் இனமுறையர் என்றுஇகழார் நின்ற**
**ஒளியோடு ஒழுகப்படும்** 698

அரசர் எமக்கு இளையவர் என்றும் எமக்கு இன்ன உறவு முறை உடையவர் என்றும் மதிப்புக் குறைவாகக் கருதாமல் அரசரிடத்தில் உள்ள நன்மதிப்போடு பொருந்த நடந்து கொள்ளுதல் வேண்டும்.

மூர்த்திகளும், திதியை உணர்த்தும் விஷாபஹரணர், ஏகபாதர், சுகாசனர் போன்ற மூர்த்திகளும், சங்காரத்தைக் குறிக்கும் காலாந்தகர், காமாரி, திரிபுராந்தகர் போன்ற சம்ஹார மூர்த்திகளும், லிங்கோற்பவர், பிக்ஷாடனர் போன்ற திரோதான மூர்த்திகளும் சண்டேசுவரானுக்கிரஹர், விக்நேசுவரானுக் கிரகர் போன்ற அனுக்கிரக மூர்த்திகளும் இவ்விருபத்தைந்தனுள் அமையக் காண்கிறோம். இதுகாறும் கூறப்பட்ட தொழில்கள் ஐவகையின வெனினும் இவை யாவும் ஆன்மாக்களுக்கு அருளும் கருணையை அடிப்படையாகக் கொண்ட தோற்றத்தின. எனவே, எல்லாத் திருக் கோலங்களும் அருளும் இயல்பினவாய அநுக்கிரக நிலையினவே. இவற்றுள் சோமாஸ்கந்த மூர்த்தியின் அமைப்பில் அருளும் பெற்றி நம்மைப் பெரிதும் ஈர்க்கும் பெருஞ் சிறப்புப் பொலிய விளங்குகின்றன.

சோமாஸ்கந்த மூர்த்தியின் அமைப்பில் இறைவன் ஸ்கந்தருடனும் உமையுடனும் ஒருங்கு விளங்கக் காண்கின்றோம். ஆகமங்கள் இம்மூர்த்தி அமைய வேண்டும் முறையினைத் தெளிவாகக் கூறுகின்றன. ஸ்கந்தர் இல்லாத நிலையில் இறைவனும் இறைவியும் வீற்றிருக்குங் கோலத்தை உமாசஹிதமூர்த்தி எனவும் ஸ்கந்தரும் உமையும் இன்றி இறைவன் தனித்தமர்ந்திருப்பதை சுகாசன மூர்த்தி எனவும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இம்மூர்த்திகள் யாவற்றிலும் இடதுகால் மடித்து ஆசனத்தில் படிந்து கிடக்கும் படியாகவும் வலது கால் தொங்கியவாறும் இறைவனின் கோலம் சித்திரிக்கப்படும். மானும் மழுவும் பின் கைகளில் விளங்குவன. முன்னர், வலது கை அபயகரமாகவும் இடது கை வரத கரமாகவும் அமைவன. இதுவே இறைவனின் தோற்றம். இங்கு இறைவன் இவ்வாறு அபய வரதமாகிய கையமைப்புகளைப் பெற்று விளங்குகின்றது. அவன் உயிர்களைக் காத்தும் வேண்டுவார் வேண்டுபவற்றை ஈந்தும் நிற்கும் அநுக்கிரக மூர்த்தியின் நிலை என்னும் உண்மையை மிகவும் பொருத்தமாகவே சித்திரித்துக் காட்டுகின்றது. அருகும் நிலையில் சிறப்புறச் சித்தரிக்கப்பட வேண்டிய இறைவனுக்கு அருளல் என்னும் வரங்கொடுக்கும் நிலையை உணர்த்தும் வரத கரமே முற்றிலும் பொருத்தமானது. இருந்தும், சிவாகமங்களில் இவ்வரதகரம் சிம்ஹகர்ண ஹஸ்தமாகவும் அமையலாம் என விதி கூறப்பட்டுள்ளது. இதைச் சற்று உன்னி ஆராய்ந்தால் பேருண்மை வெளியாகும். அருளுங் கோலத்தை இவ்வாறு வரதகரத்தை அமைத்துக் காட்டுவதைக் காட்டிலும். சிம்ஹகர்ண ஹஸ்தத்திலேயே சிறப்புறச் சித்திரிக்கலாம் என்னும் அடிப்படையிலேயே ஆகமங்கள் சிம்ஹகர்ண ஹஸ்தத்தை சோமாஸ்கந்த மூர்த்திக்கு விசேடமாக உரித்தாக்குகின்றது. அருளும் உரிமை மிகுந்த இறைவனையும் இறைவியையுந் தவிர வேறு எந்தத் தெய்வங்கட்கும் சிம்ஹகர்ண ஹஸ்தம் உரியதன்று. சிங்கத்தின் காதை நிகர்க்கும் அமைப்பு வாய்ந்ததனாற் போலும் இது இப்பெயர் பெறலாயிற்று.

**கொளப்பட்டோம் என்று எண்ணிக் கொள்ளாத செய்யார்**
**துளக்கற்ற காட்சி யவர்** 699

நிலைத்த உறுதியான அறிவினை உடையவர் 'தாம் அரசனால் மதித்துக் கைக்கொள்ளப்பட்டோம்' என்று கருதி அரசன் மனங் கொள்ளாதவற்றை (விரும்பாதவற்றை)ச் செய்ய மாட்டார்.

சிம்ஹ கர்ண ஹஸ்தமும் வரத ஹஸ்தத்தின் தன்மை வாய்ந்ததே. குறிப்பாக அவதானித்தால் இக்கரம் வரதகரத்தைக் காட்டிலும் மிகவும் உரிய முறையில் அருளும் கோலங் காட்டு வதை உணரலாம். சிம்ஹகர்ண ஹஸ்தமாகிய இக்கையமைப்பில் அபய நிலையினதாக கை போலவே மேல் நோக்கிப் பிடிக்கப்பட்ட விரிந்தகையில் சுட்டு விரல் மட்டும் மேல் நிமிர்ந்து உள்ளங் கையை நோக்கிச் சிறிது உள் வளைந்து நிற்க ஏனைய விரல்கள் சிற்பியின் கற்பனைக்கும் கை வண்ணத்திற்கும் ஏற்ப இம்முத்திரை வனப்புற அமையும்/ இப்படிச் சுட்டு விரலைச் சற்று வளைத்துத் தன்னை நோக்கி வருமாறு அசைத்துச் சைகை பெயர் பெறும். (ஆஹுய கூவியழைத்து வரத - வரந்தருவது) எனவே. ஆஹுய வரதம் என்பது வலிந்து கூவியழைத்து வரந்தரல் எனப் பொருள்படும். மணிவாசகப் பெருமான் விதந்து பாடிய 'ஈர்த்து ஆட்கொண்ட' திருக்கோலம் இதுவே. அடியவன் வரம் பெறும் நோக்குடன் தம்மை வந்தடைந்து வேண்டிய பின் வரந்தரும் நிலையினைக் காட்டும் வெறும் வரத கரமாயமைவதைக் காட்டிலும் தாமே வலிந்து விரலால் வளைத்துச் சுட்டி 'என்னிடம் வா, வரந்தருகிறேன்' எனச் சுட்டு விரலைத் தம்மை நோக்கி வளைத்துச் சைகை காட்டி ஈர்த்து (ஆஹுய) வரமருளும் (வரத) நிலையில் சோமாஸ்கந்த மூர்த்தியின் கோலம் அமைந்து இறைவன் அநுக்கிரகிக்கும் முறையின் பெருஞ் சிறப்பை உணர்த்தி நிற்கின்றது. இவ்வாறு வலிந்து அழைத்து வரந்தருபவன் எதையும் வரையாது வழங்கும் தியாக நிலையினன். இது பற்றியே இக்கோலத்தில் இறைவனுக்குத் தியாகராஜன் என்னும் மறுபெயருமுண்டு.

சோமாஸ்கந்த மூர்த்தியை ரதோற்சவம் போன்ற முக்கிய உற்சவ தினங்களில் மட்டும் உலாக் கொண்டெழுந்தருளச் செய்தல் பெரு வழக்கில் இருக்கின்றது. ஆன்மாக்களுய்யும் வண்ணம் அருளும் நோக்குடன் நிகழும் பிரம்மோத்ஸவத்தில். அனுக்கிரகிக்கும் கோலம் விசேடமாகக் காட்டி நிற்கும், சோமாஸ்கந்த மூர்த்தியே நாள் தோறும் எழுந்தருளச் செய்தல் பற்றியும் இவ்வாறு உலாக் கொண்டருளும் வேளை நின்ற கோலத்தில் விளங்கும் வீரசக்தியும் உடன் புறப்படுவது பற்றியும் ஆகமம் கூறும். இச்சந்தர்ப்பத்தில் சந்திரசேகரர் முதலிய ஏனைய மூர்த்தி பேதங்கள் புறப்படும் வேளை வீரசக்தியின் புறப்பாடு ஆகமத்தில் தடை செய்யப்பட்டுள்ளதும் உன்னற் பாலது. அருளுங் கோலம் விசேடமாகக் காட்டி சோமாஸ்கந்த மூர்த்தி வடிவில் இறைவன் புறப்படும் வேளையில் மட்டுமே, சக்தியின் அனுசரணையால் இறைவன் அருள் புரியும் தத்துவம் வெளிப்படையாகச் சுட்டி உணர்த்தப்படும் முறையில் போலும், வீர சக்தி உலாக் கொள்ளல் விதித்துக் கூறப்பட்டுள்ளது. இறைவனோடு அபின்னமாக நின்று உயிர்கள் உய்யும் வண்ணம் அருளும் சக்தியின் சிறப்பினை சோமாஸ்கந்த மூர்த்தி பற்றி ஆகமங்கள் எடுத்துரைக்கும் பகுதிகளே தெளிவாக உணரத் தருகின்றன.

**பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்**
**கெழுதகைமை கேடு தரும்** 700

அரசனோடு இளமையிலிருந்தே நாம் பழகி வந்துள்ளோம் என்று கருதி தமக்குத் தகாதவற்றைச் செய்யும் தவறான நட்புரிமை அமைச்சர் முதலியோருக்கு அழிவைத் தரும்.

# பிரபஞ்ச தாத்பரியம்

சுவாமி சாந்தாநந்தா

வாழ்க்கையானது இடைவிடாது முன்னேற்றம் அடையும் போக்குடையது. ஆங்கிலத்தில் இதை "எவல்யூஷன்" (Evoluation) என்று சொல்லுவார்கள். பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொன்றும் இடைவிடாது வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கிறது. உயிரற்ற ஜடவஸ்து உயிருள்ளவையாக மாறும், உயிருள்ளவை உணர்வு கொண்டவையாக மாறும், உணர்வு கொண்டவை புத்திநுட்பமான ஆறறிவு படைத்தவையாக மாறும், ஆறறிவு படைத்தவை எப்போதும் உள்ளுணர்வு கொண்டவையாக மாறி, இறுதியில் பர உணர்வு பெற்று, ஆத்ம சொரூபமாக மாறும், இதுவே "பரிணாம தத்துவம்" ஆகும். ஜடநிலையிலிருந்து சித்சொரூப நிலைக்கு அதாவது தெய்வீக நிலைக்குப் படிப்படியாக முன்னேறுவதே "பரிணாம தத்துவம்" எனப்படும்.

**'புல்ஆகி, பூடுஆய், புழுஆய், மரம்ஆகி,**
**பல்மிருகம் ஆகி. பறவைஆய், பாம்பாகி,**
**கல்ஆய், மனிதர்ஆய், பேய்ஆய், கணங்கள்ஆய்,**
**வல்அசுரர்ஆகி, முனிவர்ஆய், தேவர்ஆய்....'**

-மாணிக்கவாசகர் - (திருவாசகம்)

உணர்வு கொண்டவையாக மாறும்வரை வாழ்க்கையானது தன்னிச்சையின்றி ஒரு இயந்திரத்தில் முடிக்கிவிடப்பட்ட பொம்மை போல் இயங்குகிறது. இந்நிலையில் வாழ்க்கையானது பசி, தாகம், சிற்றின்பம் இவைகளை அனுபவிப்பதிலேயே திருப்தி அடைகிறது. இதைத்தவிர அதற்கு அப்போது வாழ்க்கை இலட்சியம் வேறொன்றுமில்லை. இதற்கு அடுத்த கட்டத்தை அது அடையும்போது, அதாவது புத்திநுட்பமுள்ள ஆறறிவு படைத்தவையாக மாறும்போது தனது உள்ளும், புறமும் சுற்றுமுள்ளனவற்றை யெல்லாம் பார்த்து ஆராய்ந்தறிய முற்படுகிறது.

இவ்விதமாகப் பார்த்து ஆராய்ந்து அறியமுற்படும்போது, சிலவற்றைப் பார்க்கும்போது பயம் ஏற்படுகிறது; இன்னும் சிலவற்றைப் பார்க்கும்போது சந்தோஷம், பயபக்தி நன்றி உணர்ச்சி ஏற்படுகிறது. மேலும் சிலவற்றைப் பார்க்கும் போது ஆச்சரியம் ஏற்படுகிறது. காற்று, மழை, நெருப்பு, இடி, பூகம்பம் முதலியனவற்றால் பயமும்; சூரியன். சந்திரன் முதலியனவற்றால் சந்தோஷம், பயபக்தி. நன்றி உணர்ச்சியும்; மின்னல், நட்சத்திரம் முதலியனவற்றால் ஆச்சரியமும் ஏற்படுகின்றன.

மேலும் மேலும் சிந்தித்து ஆராயத் தொடங்கும் போது பலவித சந்தேகங்கள் உதயமாகின்றன. தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள மனிதன் வாழ்க்கைத் தத்துவங்களை அலசிப் பிரித்து ஆராய முற்படுகிறான், இவ்விதம் செய்யும்போது வாழ்க்கையானது ஒரு போராட்டமாக மாறுகிறது. இவ்வுணர்ச்சியே. ஏன்? எது? எப்படி? போன்ற கேள்விகளை எழுப்புகின்றன. நான் யார், முன்பு எங்கிருந்தேன்? இனி எங்கு செல்வேன்? என்னைப்போன்றவர்கள் யார்? என்னைச் சுற்றிலும் உள்ள உலகம் யாது? உலகத்தைப் படைத்தவன் யார்? இவ்வுலகம் முடிவில் என்ன ஆகும்? என்னையும் உலகத்தையும் இயக்கி வரும் பொருள் உண்டா? உண்டெனில், அது

யாது? என்ற பிற கேள்விகளும் எழுகின்றன. பாமரமக்களுங்கூட "சூரியன் வருவது யாராலே, சந்திரன் திரிவது யாராலே" என்பது போன்ற பல கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர், இப்படியாக, எல்லா விஷயங்களிலும் இயற்கையில் நிகழும் எல்லாச் சம்பவங்களிலும் ஏன்? எது? எப்படி? என்ற கேள்விகளைக் கேட்டு அறிவதிலேயே தனது முழுக்கவனத்தையும் முழு மனநாட்டத்தையும் அவன் செலுத்துகின்றான். இவ்வாறாக இயற்கையில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பிரித்தறிந்து விடைகாணுவதில் ஒருசிலர் ஒருமுகமாகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள், அப்படிப்பட்ட ஒருவரையே நாம் "ரிஷி" அல்லது முனிவர் என்று சொல்கிறோம் "ரிஷி" தீர்க்க ஆலோசனை செய்து உண்மைப் பொருளைக் கண்டவர் ஆவர், "முனிவர்" மனதினால் ஆலோசனை செய்து தம் முள் மெய்ப் பொருளை உணர்ந்தவர் ஆவர்.

புதிது புதிதாகக் கண்டு பிடிக்கிற இக்கால விஞ்ஞானிகளை நாம் இக்கால ரிஷிகள் எனலாம். அவ்விதமே பழங்கால ரிஷிகளை பழங்கால விஞ்ஞானிகள் எனவும் சொல்லலாம். ரிஷிகள் பழங்காலத்தில் பலர் இருந்தனர். இன்றும் இருக்கின்றனர்; இனியும் இருப்பர். படித்த மேதைகளிலும் ரிஷிகள் தோன்றுவர்; பாமர மக்களிடையேயும் ரிஷிகள் தோன்றுவர்.

**'முகத்தில் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்**
**அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்.'**
-திருமூலர் (திருமந்திரம்)

அகத்தில் கண்கொண்டு பார்த்த ரிஷிகள், உலகில் காணும் பொருள்கள் யாவும் தோன்றி, சிறிதுகாலம் இருந்து, மடிந்து, பிறகு அழிவதைப் பார்த்தார்கள். அவ்வாறு உலகில் தோன்றும்பொருட்கள் யாவும் மாறுதல் அடைந்து கொண்டே இருப்பதையும் கண்டார்கள்.

பிரபஞ்சத்தில் நடக்கும் சிறிய. பெரிய, எல்லா நிகழ்ச்சிகளும் ஒரு சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நியதியுடன் நடக்கின்றதை ரிஷிகள் அறிந்தார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சியின் உள்ளேயும் ஒரு அமானுஷ்யமான அறிவாற்றல் அல்லது சக்தி இயங்குவதைப் பார்த்தார்கள்.

உதாரணமாக ஒரு குழந்தையின் பிறப்பை எடுத்துக் கொள்வோம். தாயினுடைய கர்ப்பத்தில் ஒரு சிறிய அணுவாகத் தோன்றிய கணத்திலிருந்து, ஒவ்வொரு நொடி, ஒவ்வொரு விநாடி, ஒவ்வொரு மணியும் அதிசயிக்கத்தக்க வியப்பிற்குரிய ஒரு கணக்கு முறைக்கு உட்பட்டதே போல மாறுதல்கள் ஏற்படுகின்றன, வைத்திய சாஸ்திரத்தில் தேர்ந்த ஒரு விஞ்ஞானி இவைகளை நன்கு நமக்கு விவரிக்கக்கூடும்.

இன்னொரு உதாரணமாக ஒரு மலரை எடுத்துக்கொள்ளுவோம். பொழுது புலர்ந்ததும் நம் வீட்டுத் தோட்டத்தில் ஒரு அழகிய மலரைக் காண்கிறோம், ஆனால் நாம் முன்னாள் மாலை பார்த்ததென்னவோ ஒரு சிறியமலர் மொட்டுத்தான். ஒரு தாவரஇயல் விஞ்ஞானியைக் கேட்டால் அவர் விவரமாகச் சொல்லுவார். எப்படி மொட்டு மலராகும் வரை ஒவ்வொரு விநாடியும் ஒரு அமானுஷ்யமான அறிவாற்றலானது உள்ளிருந்து வேலை செய்கிறது என்பதை அவர் தெளிவாக நமக்கு விவரிப்பார்.

இதுபோல அதிசயிக்கத்தக்க வகையில் இந்தப் பூமி. மலைகள், சந்திரன், நதிகள், நக்ஷத்திரங்கள், இடி, மின்னல் யாவும் சொல்லப் போனால் இப்பிரமாண்டத்தில் உள்ள ஒரு சிறிய

அணுவிலிருந்து ஒரு பெரிய வால் நக்ஷத்திரம் வரை இந்த அமானுஷ்யமான பேரறிவு எங்கும் வியாபித்திருக்கும் உண்மையை ரிஷிகள் கண்டறிந்தார்கள். எல்லாவற்றையும் அது இயக்கிக் கொண்டிருப்பதை இந்த ரிஷிகளும் முனிவர்களும் கண்டறிந்தார்கள், இந்த அமானுஷ்யமான பேரறிவையே,

**'................தன்னருள் வெளிக்குளே**
**அகிலாண்ட கோடியெல்லாம்**
**தங்கும் படிக்கிச்சை வைத்து...........'**

என்று தாயுமானவர் குறிப்பிட்டார்.

இவ்வாறாக நமது ரிஷிகளும், முனிவர்களும் தங்களுடைய மதிநுட்பமான பகுத்தறிவுத் திறனால் எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து, அவ்வாறு அலசிப் பார்க்கும் தன்னையும் ஆராய்ந்து கடைசியில் ஒரு பெரிய ஞான அனுபவத்தை அடைந்தார்கள். பல இடங்களிலும் பல காலங்களிலும் பல்விதங்களிலும் வாழ்ந்து மறைந்த ரிஷிகள் தாங்கள் அடைந்த ஒருமித்த ஞானானுபவம் யாதெனின் பிறந்து வளர்ந்து மறையும்படி அமைந்து கடைசியில் அழிந்து மறைகின்ற பிரபஞ்சத்திற்குப் பின்னால் பிறப்பற்ற, மாறுதலற்ற அழிவற்ற ஆக்கசக்தி உள்ள ஓர் பேரறிவு இயங்குகிறது என்றும் அப்பேரறிவு பிரம்மம், "பரசிவம்", "கடவுள்", "ஈஸ்வரன்". "பரவஸ்து" என்றும் பல விதமாகக் கூறுகின்றார்கள் என்பதுமே ஆகும்.

இப்பிரபஞ்சமானது அப்பரவஸ்துவிடமிருந்து தோன்றி அப்பரவஸ்துவினாலேயே காக்கப்பட்டு, கடைசியில் பிரளய காலத்து அப்பரவஸ்துவுடன் சேர்ந்து ஐக்கியப்படுத்திக் கொள்ளுகிறது.

**'ஆக்கம், அளவு, இறுதி, இல்லாய்! அனைத்து உலகும்**
**ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய்,**
**போக்குவாய், என்னை புகுவிப்பாய்............'**

-மாணிக்கவாசகர்- (திருவாசகம்)

மேதக்க விஞ்ஞானி ஆல்பர்ட் ஈன்ஸ்டீன், அணுசக்தி ஆற்றலைக் கண்டறியவும், பல விஞ்ஞான சந்தேகங்களை நிவர்த்தி செய்யவும் உதவிய, இடம் நேரம் இரண்டும் கலந்த நான்காவது அளவைக் கண்டுபிடித்து உலகிற்கு அளித்தார், இந்த நான்காவது அளவை ஆங்கிலத்தில் "தியரி ஆப் ரிலேடிவிடி" (Theory of Relativity) என்பர். அவரை ஓர் "நவீன காலரிஷி" என்றே சொல்லலாம். அவரும் இந்தக் கண்டு பிடிப்பினால் "யாவற்றையும் இயக்கவல்ல அமானுஷ்ய சக்தி ஒன்றுள்ளது" என்ற உண்மையைக் கண்டு எடுத்துரைத்துள்ளார்.

**'போற்றி! இப்புவனம், நீர். தீ**
**காலொடு, வானம் ஆனாய்**
**போற்றி! எவ் உயிர்க்கும் தோற்றம்**
**ஆகி, நீ. தோற்றம் இல்லாய்**
**போற்றி! எல்லா உயிர்க்கும்**
**ஈறு ஆய், ஈறு இன்மை ஆனாய்**
**போற்றி! ஐம்புலன்கள் நின்னைப்**
**புணர்கிலாப் புணர்க்கையானே.'**

-மாணிக்கவாசகர்- (திருவாசகம் - திருச்சதகம்)

இவ்வாறு ரிஷிகள் உண்ண உணவும் உடுக்க உடையும் உறைய உறைவிடமும், கருதாது யாவற்றையும், மறந்து, கருமமே கண்ணாக, தங்கள் முழு கவனத்தையும் செலுத்தி, பரப்பிரும்மத்தைத் தங்கள் இதயத்தில் கண்டு தியானித்தார்கள். நாமும் அவர்களைப்போல் பரப்பிரமத்தை நினைத்து தியானிப்போமாக.

# விளக்கீடு

விளக்கீடென்னுந் திருவிழா சிவபெருமானே முதற் கடவுளென்பதை விளக்குவது. அவர் பிரம விஷ்ணுக்களுக்கு ஞான ஒளிவடிவாகத் தம்மைக் காட்டிய திருவருளே இந்த நாளிற் கொண்டாடப்படுவது. அதற்காகக் கோயில்களிலும் வீடுகளிலும் மற்றுமிடங்களிலும் பெருந்தொகை? யான விளக்குகள் ஏற்றப்படுகின்றன. கோயில் வாயிலிற் பெரு நெருப்புண்டாக்கப்படுகின்றது. அதற்குச் சொப்பனை என்று பெயர். இது கார்த்திகை மாதத்திலே வரும் பூரணையிற் செய்யப்படுவது. (சொக்க என்பது கஷ்சு என்பதன் திரிபென்பர்: கஷ்க - உலர்ந்த)

பூசை முறை - முதல்நாள் சாயங்காலம் மங்கலகிரியைகளை முடித்துச் சிவாக்கினியுமாக்கி ஒன்பது தகழிகளிலே அந்த அக்கினியைப் பூசித்து வைத்தல் வேண்டும். விளக்கீட்டு நாளிலே கோயிலின் முன்பாக ஒரு உயரமான மரத்தை நாட்டி அதைச் சுற்றித் தகழிகள் வைத்ததற்குச் சலாகை பொருத்திக் காய்ந்த ஓலை முதலியவற்றால் வட்டமாக அடைத்துவிடுக. பொழுது பட்ட பின்பு சிவபெருமானை எழுந்தருளச் செய்து அந்த மரத்துக்கு முன்னே நிறுத்தி அந்த மரத்திலே சிவபெருமானைப் பூசிக்க, ஒன்பது தகழிகளில் ஒன்றை மரத்தின் நுனியிலும், மற்றவைகளை மனத்தைச் சுற்றி எட்டுத் திக்குகளிலும் வைக்க. அந்தத் தகழிகளியுள்ள நெருப்பானது சுற்றியிருக்கும் இலைகளிலே பிடிக்க முழுவதும் எரியும். அந்த மரமும் ஒளியும் சிவபெரு மானுடைய சோதி ரூபத்தைக் குறிக்கும். எரிந்த தாம்பவைச் சிவபெருமானுக்குச் சாத்தி அடியார்க்குக்குங் கொடுக்க. பின்பு மரத்தைத் தறித்து விடுக.

சிவபெருமான் பிரம விஷ்ணுக்களுக்குத் தோன்றிய கதை பின்வருமாறு. அருணாசல புராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது:- பிரமதேவர் செருக்குண்டு தாமே முழுமுதல் கடவுளென்றெண்ணி விஷ்ணுவிடம் போய்த் தம்முடைய பெருமைகளைச் சொன்னார். விஷ்ணு பிரமாவைத் தாழ்த்திப் பேசினார். இதனால் இருவருக்குமிடையிற் சண்டை உண்டாயிற்று. இவர்களுடைய விரோதத்தைத் தீர்க்க வேண்டுமென்று தேவேந்திரன் சிவபெருமானுக்கு முறையிட்டான். அப்போது சிவபெருமான் நெருப்பு வடிவமான ஒரு மலை போல இருவருக்குமிடையிலே தோன்றினார். பிரம விஷ்ணுக்கள் அதைக்கண்டு அஞ்சினர். அது மிகப் பெரிதாயிருந்தபடியால் அதன் அடியையேனும் நுனியையேனும் காண்பரே தங்கட்குட் பெரியவராவரென்று தீர்த்தனர். விஷ்ணு அந்த நெருப்பு மலையின் அடியை அறிந்து வருகின்றேனென்று பன்றி வடிவாகப் பூமியை அகழ்ந்து கீழே சென்றார். பிரமா நுனியை காணுதற்காக அவர் அன்ன வடிவத்தோடு மேலே பறந்து போனார். விஷ்ணு அடியைக் காணமாட்டாதவராய் வலுவிழந்து இது பரம்பொருளாகிய சிவபெருமானுடைய தோற்றமே என்றும் அதன் நுனியை பிரமா காண மாட்டாரென்றும் நிச்சயித்துக் கொண்டு மகிழ்ச்சியோடு பூமிக்கு மேலே வந்தார். பிரமா முடியைக் காணாதிருக்கவும் தமது அகந்தையினால் அதைக் கண்ட வலிமையைக் கெடுத்தற்காகச் சிவபெருமான் நேரே தோன்றி அவரைக் கண்டித்து இருவருக்கும் அருள் செய்தார். அந்த அக்கினியைக் காட்டும் மலை (அருணாசலமாகிய) திருவண்ணா மலையாம். இந்தப்பேரருள் கார்த்திகை மாதத்திலே கார்த்திகை நட்சத்திரத்திலே எவர்களும் பெறத்தக்கது. அந்த ஒளியைக் குறித்தற்காகவே சைவ நாடெங்கும் அந்த நள்ளிரவில் பல இடங்களிலும் விளக்கு ஏற்றப்படுகின்றது.

# குனிப்புடையான்

பேரறிஞர் முருகவேபரமநாதன்

குனி - கூனல், குனிதல் - வளைதல், கூனல், தலைதாழ்த்தல், குனித்தல் - அசைத்தல், ஆடல், வளைத்தல், குனிப்பாய்ப் பார்த்தல், கவனமாய்ப் பார்த்தல், குனிப்பு - ஆடல், கூத்தின்விகற்பம், வளைப்பு, குனிவு - வளைவு, கோணல் முடங்கல், மடங்கல்.

சிவன் சைவசமயிகளின் முழுமுதல் பரம் பொருள். இன்று சீனர்களின் தெய்வத்தை அறிமுகம் செய்யும் ஆலயங்களும் வந்து விட்டமை கவனத்துக்குரியது. சைவத்தின் மேற்சமயமும் இல்லை, சைவத்தின் மேற்சமயமும் இல்லையெனும் கொள்கை கோட்பாடுடையவர்கள் அசல் சைவசமயிகள். எங்கள் பன்னிருதிருமுறைகள் வேத சாரமானவை, அறக்கோட்பாடுகளை வெளிப்படுத்துவதும் இப்பக்திப் பனுவல்களே. இவ்வண்ணமே மெய்கண்ட சாத்திரங்களும். விளக்கங்களும் சாத்திரமாய்த் திகழ்கின்றன. இவை போற்றும் தெய்வம்சிவனே. தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்ற திருவாக்கு மணிவாசகர் வெளிப்பாடு. சிவனே ஆடல் வல்லான், கூத்தப்பிரான், மன்றாடியார், ஆடல் அரசன். இவர் ஆடும் மூலத்தானம் சிதம்பரம். இங்கே பஞ்சகிருத்திய நடனம் நிகழ்கிறது. அநவரததாண்டவம், ஆனந்தநடனம் இஃது. எம்பெருமான் நடனமாடுகிறான். வெகு நாகரிகமாக. இதனால் உலகமே இயங்குகிறது. இதையே உலகம்பல விதம் என்று பேசப்படும். இதைபங்கீகரணம் செய்தால் உலகம் + அம்பலவிதம் என்றாகும். நடராசர் திருக் கோலமும், தாமரைமலரும் தமிழர்க்குக் கிடைத்த மாபெருஞ்செல்வமென ஆனந்த குமாரசுவாமி, (கலாயோகி) அவர்கள் கூறியுள்ளார். நடராசர் தத்துவத்தை இவரும், விபுலாநந்த அடிகளாரும் ஆய்ந்துள்ளனர். கூத்தனின் நெருப்பு அழித்தலையும், உடுக்கு படைத்தலையும், அபயகரம் காத்தலையும், தூக்கியதிருவடி அருளலையும், அஸ்மாரன்மேல் ஊன்றியபாதம் மறைத்தலையும் குறிக்கும்.

சிதம்பரம், மதுரை, திரு நெல்வேலி, குற்றாலம், திருவாலங்காடு என்பன இறைவன் ஆடும் பஞ்ச சபைகளாம்.

**'பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே**
**நாடுகின்ற ஞானமன்றில் ஆடுகின்ற அழகனே'**

தாயுமானவர் - 53 பாடுகின்ற பனுவல்

தாண்டக வேந்தர் எனப் போற்றப்படும் பாடல் அரசர் ஆடல் அரசரைத் தரிசிப்பான் விழைந்து சிதம்பரம் போன போது அவனது அழகிலே மகிழ்ந்து பாடிய பாசுரம் உலகப்பிரசித்தமானது.

**குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்**
**பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்**
**இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே.**

திருமுறை 4. 81. 4

வேண்டேன் பிறவியென வெந்து நொந்து, நைந்து பாடிய ஆளுடையரசு. மன்றாடியாரின் திருக் கோலத்தைக்காண, இன்னும் பலமுறை மனித ஜன்மம் எடுக்கலாமென இங்கிதமாகப் பாடல் செய்தார். ஆக நமக்கு வாய்த்த இப்பிறவியை நாம் பயன்படுத்த வேண்டுமென அடுத்த பாடலிலே அழகாகப் பாடி எம்மை விழிப்புணர்வு கொள்ளச் செய்தார்.

குனித்த புருவம் - வளைந்தபுருவம், நெறித்த புருவம், புருவம் - இமை.

**வில்லினை யொத்தபுருவம் வளைத்தனை வேலவா - அங்கோர்**
**வெற்பு நொறிங்கிப் பொடிப்பொடியானது, வேலவா!**

பாரதி - 3 வேலன்பாட்டு

இந்த அளப்பெருங்காட்சியை, வளப் பெருந்தன்மையைக் கண்டு, இப்பிறவியினின்றும் கடைத்தேறப் பொருத்தமான. உசிதமான பிறவி மனிதம் ஒன்றேதான். அதை - கிடைத்த

பிறவியை நாம் என்றும், எவ்விடத்தும் பயன்படுத்த வேண்டுமென்பது அப்பர் பெருமானின் கருதுகோள்.

**வாய்த்தது நந்தமக்கீதோர் பிறவி மதித்திடுமின்**
**பார்த்தற்குப் பாசுபதமருள் செய்தவன் பத்தருள்ளீர்**
**கோத்தன்று முப்புரந்தீ வளைத்தான்தில்லை**
**அம்பலத்துக் கூத்தனுக் காட்பட் டிருப்பதன்றோநங்**
**கூழமையே**

கூழமை - கடமை, பார்த்தன் - அர்ச்சுனன்

திருமுறை 4 - 81 - 5

மாக்களும் மாவும் ஐயறிவின, மனிதம்தான் ஆறறிவுடைத்து ஏழாமறிவு ஞானத்தில் ஞானம். இ∴து சாகாக்கல்வி ஆக மனித்தப்பிறவியின் செம்மையை, அறிவால் மிதந்த ஔவைமாது எடுத்துச் சொன்னாள்.

**அரியது கேட்கின் வரிவடி வேலோய்**
**அரிது அரிது மானுட ராத லரிது**
**மானுட ராயினும் கூன்குருடு செவிடு**
**பேடு நீங்கிப்பிறத்தல் அரிது**
**பேடு நீங்கிப்பிறந்த காலையும்**
**ஞானமுங் கல்வியும் நயத்தல் அரிது**
**ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்**
**தானமுந்தவமும் தான் செயல் அரிது**
**தானமுந் தவமுந் தான் செய்வராயின்**
**வானவர் நாடுவழி திறந்திடுமே**

தனிப்பாடற்றிரட்டு

விழுமமிக்க இப்பிறவியை எடுத்துப் பேசாதவர் இல்லை. புரட்சிப் புலவனும், அவன் போற்றிய தாயுமானவரும் மானும் மகத்தான தெனத்திருவாய் மலர்ந்தனர்.

**எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்**
**யாதினும் அரிது அரிதுகாண**
**இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ**
**ஏதுவருமோ? அறிகிலேன்**

தாயுமானவர் - சித்தர் கணம் 4

இப்பிறவிப்பயன் எய்த வேண்டின் நடராசன் திருவடி பணிந்து, இப்பிறவியை வேரறுக்க வேண்டும். இக்கூத்தன்பெருமையைப் பாதிப் பதிகங்கள் ஒன்று கூடப் பாடி மணி மொழிப் பிரான். பாராட்டிய தொடர்தான் குனிப்புடையான்.

**தினைத்தனை உள்ளதோர்**
**பூவினில் தேன் உண்ணாதே**
**நினைத் தொறும் காண்தொறும்**
**பேசுந் தொறும் எப்போதும்**
**அனைத்து எலும்பு உள்நெக**
**ஆனந்தத்தேன் சொரியும்**
**குனிப்புடை யானுக்கே**
**சென்று ஊதாய் கோத்தும்பீ**

வாசகம் - கோத்தும்பி. 3

குனிப்புடையான் - திருநடனமிடுவான்; நடன சிகாமணி, (நடராசன்) கோ - தலைமையான, அரச, தும்பி - வண்டு இராச வண்டு. என்குருதேவர் ஸ்ரீமத் சபாரத்தினம் அடிகளார் (திருவாசக சுவாமிகள்) கோத்தும்பி என்பது மனதையே குறிக்கும் எனப்பொருள் விரிப்பார். இதைத் தானம் பண்ணுவது போலமூதறிஞர் இராஜாஜி விளக்கம் செய்துள்ளார். அ∴து வருமாறு, குனிப்புடையான் - நடராஜன். ஈசன், "கோத்தும்பீ என்று விளித்தது உள்ளத்தை. வேறு தேனைத் தேடிச்சிற்றின்பங்களை அடைவதில் என்னபயன்? மனமே! பேரானந்தத்தேன் சொரியும் ஈசன் என்ற பூவிலுள்ள தேனைத் தேடிக்குடிப்பாய் என்று ஆன்மாவை வண்டாக வைத்துச் சொல்லுகிறார்.

பஜகோவிந்தம் பக்கம் 45

இத்தீந்தமிழ்ப்பாடலிலே - நினைத்தொறும் பேசுந்தொறும் காண் தொறும் என்று பாடிய சுவாமிகள் எப்போதும் என்ற தொடரைப் பெய்துள்ளமை கவனித்தற்பாற்று. சதா ஆனந்தமயமாய் இருப்பதுதானே அந்நிலை; ஒளிவளர்விளக்கேயெனும் திருவிசைப்பாவில் சித்தத்துட் தித்திக்கும் தேனேயெனவரும் பிரயோகம் நம்மை எங்கோ கொண்டு செல்கிறது. திருவாசகத்திலமைந்துள்ள இனிவரும் பாடலையும் ஒப்பீட்டு ஆய்வில் நோக்கின் பாடற் பொருட் செறிவு தெற்றெனப் புலனாகும்.

**பால்நினைந் தூட்டுந் தாயினுஞ்சாலப்**
**பரிந்துநீ பாவியேனுடைய**
**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி**
**உலப்பிலா ஆனந்த மாய**
**தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த**
**செல்வமேசிவபெருமானே**

யானுனைத் தொடர்ந்து சிக் கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே

பிடித்த பத்து 9

சிவனும், திருமாலும் ஆடும் நாட்டிய பாவங்கள் பாவிய வடிவிலே நாயன்மார் ஆழ்வாராதிகள் பாடியபான்மையில் குன்று தோறாடும் குமரவடிவேலனின் நடனபாணியை அருணகிரியார் அழகாகத் தமிழ் செய்துள்ளார். முக்கியமான ஒரு கட்டம். காளி உபாசகன் சம்பந்தாண்டானுடன் வாதிட்டு திருவருணையில் சிவகங்கைக்கு அருகில் உள்ள பதினாறு கால் மண்டபத்திலுள்ள (வடகிழக்கு) ஈசானத்தூணில் இருந்து முருகனை வர வழைத்து காட்சிதரச் செய்தார்; வாக்குக்கு அருணகிரியார்.

அதல சேடனாராட அகில மேரு மீதாட
அபினகாளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகுபூத வேதாள மவையாட
மதுரவாணி தானாட மலரில் வேதனாராட
மருவு வானு ளோராட மதியாட
வனசமாமியார் ஆட நெடியமாம னாராட
மயிலுமாடி நீயாடி வரவேணும்
கதைவிடாத தோள்வீம னெதிர்கொள் வாளியால் நீடு
கருதலார்கள் மாசேனை பொடியாகக்
கதறுகாலி போய்மீள விஜயனேறு தேர்மீது
கனகவேத கோடூதி அலைமோதும்
உததி மீதி லேசாயு முலகமூடு சீர்பாத
உவணமூர்த்தி மாமாயன் மருகோனே
உதயதாம மார்பான பிரபுடதேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே

திருப்புகழ் 1292

அதலசேடன் - ஆதி சேடன்

அபின. பின்னமிலா, விடையி லேறுவார் - சிவன், மதுரவாணி கலைமகள், வேதன் - பிரம்மா. வனசம் - தாமரை, மாமியார். திருமகள், நெடியமாமன். திருமால், கதை - ஆயுதம். கோடு சங்கு. கூடிய லயம் சதிபிழையாமற் கொடியிடை உமையவள் ஆட, ஆடிய அழகன் நடராசன். இவர் நடனத்துக்கு இராசா. 108 சிவதாண்டவங்கள் இவருடையது. தஞ்சையிலே அவற்றைக் காணலாம். அற்புதம் செறிந்த சித்திரம் நிறைந்த பாடல்களிலே ஒவ்வொரு நடன அசைவும் ஓவியமாக வடிக்கப்பட்டிருக்கிறது.

விரித்த செஞ்சடையாட வதன சந்திரனாட
விரிகமல நயனமாட
வெண்முறுவல் நிலவாட நண்ணு தமருகம் ஆட
வீசுமொரு செங்கை ஆடத்
தரித்த புலி அதளாட அபயகரம் ஆட இரு
தங்குதோல் ஊசல் ஆடத்
தாங்குநூல் ஆடமேல் ஓங்கு நீர் ஆட
வொளிர் தண்பவள மேனி ஆட
உரித்த கரி உரி ஆட உரககங்கணமாட
உபய பரிபுரமும் ஆட
ஒரு பதம் எடுத்தாட ஒரு பதம் மிதித்தாட
உள்ளே மகிழ்ந்து சற்றே
சிரித்து மலை மங்கை கொண்டாட நின்றாடுமுன்
திரு நடனம் என்று காண்பேன்
செகம்பணி திகம்பர, சிதம்பர
நடேசனே சிற்சொருபானந்தனே

சிதம்பரநாதர்பதிகம்.

மானாட மழுவாட மதியாடப்
புனலாட மங்கைசிவ காமியாட
மாலாட நூலாட மறையாட திரையாட
மறை தந்த பிரம்மனாட
கோனாட வானுலகு கூட்டம்
எல்லாமாட குஞ்சரமுகத்தனாட
குண்டலம் இரண்டாடத் தண்டைபுலி
உடையாடக் குழந்தை முருகேசனாட
ஞானசம் பந்தரொடு இந்திராதி
பதினெட்டுமுனி அட்டபால கருமாட
நரைதும்பை அறுகாட நந்திவா
கனமாட நாட்டியப் பெண்களாட
வினையோட உனைப்பாட எனைநாடி
இதுவேளை விருதோடு ஆடி வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லை வாழ் நடராஜனே

நடராஜப் பத்து - 2

எம் இலக்கு இலட்சியத்தை அடைதல். பேசும் பொருளுக்கு இலக்கிதமான திருவாசகச் செல்வத்தைப் பாடிப்பரவி நடராஜன் பதம் பணி வோமாக. ஆத்மவிடுதலை நிச்சயம்.

# தருமமும் வாழ்வும்

மாணிக்கத்தியாகராஜா
பண்டிதர் குமாரசுவாமி

அறஞ்செய்தல் தருமம் செய்தல் எனப் பொருள் தரும். அறஞ்செய்ய விரும்பு என்றார், ஔவைப்பாட்டி. அறிவும் ஆற்றலும் மிக்கவர் ஔவை. அவர் வாக்கில் நீதியும் அறமும் நிலைத்து நிற்கும். அறஞ்செய்யும் விருப்பு ஏற்படின் அதனைச் செய்துதானே ஆகவேண்டும்.

தருமஞ்செய்தல் என்றால் இல்லார்க்கு வறியோர்க்கு - சற்பாத்திரர்க்கு, மெய்யடியார்களுக்கு உணவளித்தல் உடையளித்தல், பொருளளித்தல் ஆதியன. இதுமாத்திரமன்றி தர்மசத்திரமமைத்தல், தண்ணீர் பந்தல் அமைத்தல், கல்விச்சாலை கட்டுதல், கோவில் அமைத்தல், திருத்தல் ஆகிய காரியங்களும் தர்ம செயல்களாகும்.

இல்லார்க்கு உணவளித்தலே தர்மம். எல்லாவற்றிலும் சிறப்புடையது. “அற்றார் அழி பசிதீர்த்தல் அ∴தொருவன் பெற்றான் பொருள் வைப்புளி” என வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார். ஏழையின் வயிறுதான் ஒருவன் பொருள் - தர்மம் சேர்த்து வைக்குமிடமாகும்.

மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடமை தானம், தவம் ஆகியவற்றை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டுத்தான் ஒருவன் அம்மா பசிக்கிறது என்று ஒடுங்கி - வளைந்து - பயந்து கேட்கிறான். அவன்பசியை ஆற்றுவதே சிறந்த தர்மம். செய்யும் தர்மம் தொடர்ந்து ஏழேழு பிறவிகளிலும் வரும். உணவு உண்டவன் போதும் என்று திருப்தி சொல்வான்.

பொருள் கொடுத்தால் மனம் போதுமென்று கொள்ளாது, உடையளித்தால் இன்னும் தந்தால் என்று மனம் ஏங்கும். உணவு அளித்தால் மாத்திரம் ஒருவரிடமிருந்து போதுமென்ற திருப்தியை பெறலாம்.

நாம் சேர்க்கும் பொருள் மனைவி, மக்கள், சுற்றம் என்று செலவாகின்றது. இதில் எவ்வளவு பொருள் தர்மத்திற்குச் செலவிட்டோம் என்று நினைத்துப் பார் - நாம் சம்பாதிக்கும் பணத்தில் ஒருபகுதி தர்மத்திற்குச் செலவிட வேண்டும். உடல் உயிர், இதில் உடல் தொடர்பாக வந்தவர்கள் தான் மனை - மக்கள். அவர்களுக்குச் செய்வதில் ஆயிரத்தில் ஒருபங்காவது உயிருக்காகச் செய்ய வேண்டும். அதுதான் தர்மம். அதுவே நாம் பிறந்ததின் பயனைத்தரும்.

நாலுபேர் சிவிகை தூக்க ஒருவன் அதன்மேல் ஏறியிருந்து செல்கிறான். முற்பிறப்பில் தர்மம் செய்தவன், புண்ணியத்தின் பயனாக இப்பிறவியில் ஏறிப் போகிறான். எனவே தர்மத்தை மறவாது, வாய்க்கும் போதெல்லாம் செய்ய வேண்டும். நாளை நாளை என்று பின்போட்டால் அது நமனுடை நாளாய் போகவும் கூடும்.

ஒருவன் தனது முதுமைக் காலத்தில் தர்மம் செய்யவேண்டுமென்ற ஆசையோடு சேர்த்த பணத்தில் ஒருபகுதியைப் பொன்னாகத்திரட்டி சிறு சிறு உருண்டையாக்கி ஒரு இரும்புப் பெட்டியில் போட்டு பூட்டி வைத்திருந்தான். மரணப்படுக்கையில் அவற்றை தான் தன் கையால் வறியோர்க்குக் கொடுத்துத் தர்மத்தைச் சேர்க்க வேண்டுமென்று மனைவியிடம் சொல்லி வைத்தான். பிள்ளைகள், சுற்றத்தார், அறிய மாட்டார். ஒருநாள் திடீரென மயங்கி விழுந்துவிட்டார். எல்லாம் படுக்கையில் பேசவராது. சுற்றத்தார் எல்லாரும் சூழ்ந்த நிலையில் - படுக்கையிலிருக்கும் அந்தமனிதர் தர்மம் செய்வதற்குத் தான் சேர்த்து வைத்திருக்கும் பவுண் உருண்டையைக் கொடுப்பதற்கு எண்ணினார். வாய் பேச முடியாதல்லவா? எனவே கையைக் காட்டி மனைவியை அழைத்தார். மனைவியிடம் உருட்டிக் காட்டிப் பவுண் உருண்டையை எடுத்து வரச் சொன்னார். மனைவி எதுவும்

பேசவில்லை. திரும்பத்திரும்பச் சொல்லியும் மனையாள் அசையவில்லை. நின்றவர்கள் என்ன? அவர் ஏதோ கையை உருட்டி உருட்டிக் காட்டுகிறாரே ஏன் என, விசாரித்தார்கள். அதற்கு ஆசை மனையாள், ''ஐயோ! பாவம். அவர் ஆசைப்பட்ட பொருளைக் கொடுக்க முடியவில்லையே. அவருக்கு எப்போதும் விளாங்காயில் ஆசை. இப்போது தொண்டை அடைத்து விக்கலும் வருகிறது எப்படி விளாங்காய் கொடுப்பேன்.'' என்று சாதுரியமாகச் சொல்லித் தப்பிக் கொண்டாள். மற்றையோரை நம்பி வாழாது தானிருக்கும். நல்ல நிலைமையில் காலம் வாய்க்கும் போதெல்லாம் தர்மம் செய்ய வேண்டும்.

ஏழைகளுக்கு இடும் உணவு ஆண்டவனுக்குப் போய்ச்சேரும். ஆண்டவனுக்கு இடுவது ஏழைக்குவாராது என்பார்கள்.

அரசனுக்கும் ஆண்டிக்கும். ஏழைக்கும் - பணக்காரனுக்கும் யாவர்க்கும் மரணம் நிச்சயம். அம் மரணம் வருமுன் இறைவனைச் சரணம் பெற வேண்டும்.

''இறைவனே! நான்வளைபட்டகை மாதொடு மக்களெனுந் தளைபட்டழியத் தகுமோ? தகுமோ?'' என இறைவனிடம் வேண்டுதல் புரிய வேண்டும். இப்பிணைப்பிலிருந்து தப்ப வழிகாண வேண்டும். இறைவனை அடைவதற்கு மனைவி மக்கள் சுற்றம் தடையல்ல. நாம் மனைவி மக்களே தஞ்சம், துணை என்று எண்ணி வாழ்வதுதான் தடை. எமக்கு இவைகள்தான் துணை என்று எண்ணவைக்கும். மாயையின் செயலை மனம் கொள்வதில்லை. இவற்றை நன்றாகச் சிந்தித்துத் தெளிவு பெறவேண்டும்.

வாழ்க்கை நிலையற்றதென்றும் இறை திருப்பதமே துணையாக நின்று வாழவைக்கும் என்றும் தெளிந்து போற்ற வேண்டும்.

அத்தமும் வாழ்வு மகத்துமட்டே விழியம் பொழுக
மெத்தியமாதரும் வீதிமட்டே விம்மிவிம்மியிரு
கைத்தலைமேல் வைத்தழுமைந்தரும் சுடுகாடுமட்டே
பற்றித்தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே

என்கிறார் பட்டினத்தடிகள்.

செல்வமும் வாழ்வும் வீட்டோடு முடியும் விழி நீரோடு வீதிவரை மனைவி நிற்பாள். மக்கள் வீதிவழி அழுது வந்து சுடலையோடு நிற்பார். தொடர்வது அவன் செய்த புண்ணிய பாவம் தான். இதை நினைந்து நடந்தால் துன்பமில்லை. எந்நாளும் இன்பமே.

பொய்யான இவ்வுடலுக்கு மெய்யென்றுமொரு பெயர். பொய்யுடலை மெய்யென்று எண்ணி மரணத்தை நினையாது. என்வீடு என்பொருள் என்று உயிரை விடுகின்றோம்.

**'என்பொருள் என்பொருள் என்று ஜீவன் விடும்**
**மனமே ஒன்றியம்பக் கேளாய்**
**உன்பொருளானா லதன் மேல் உன்நாமம்**
**வரைந்துளதோ உன்றனோடு**
**முன்பிறந்து வளர்ந்ததோ இனியுனை**
**விட்டகலாதோ முதிர்ந்து நீயும்.**
**பின் இறக்கும் போததுவுங் கூட இறந்திடுங்**
**கொல்லோ பேசுவாயே'**

என வேத நாயகம்பிள்ளை பாடல் பேசுகிறது.

கொஞ்சங்கூடப் புத்தியில்லாத நெஞ்சமே! என்பொருள் என்பொருள் என்று உயிரை விடுகின்றாய் உனக்கு ஒன்று நானுரைக் கின்றேன் கேள்

உன்பொருளானால் அதன்மேல் உன்பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறதா? இல்லை உன்னோடு கூடிப் பிறந்து வளர்ந்ததோ? இல்லை இனி உன்னை விட்டு நீங்காதோ? நீங்கும். இனி நீ முதிர்வெய்தி இறக்கும் போது - என்பொருள். என்பொருள் என்றெண்ணியிருக்கின்ற உனது மனை மக்கள் சுற்றமெலாம் கூடச் சேர்ந்து இறந்திடுமா? இல்லவே இல்லை. இதைநீ அறிந்தும் அறியாதவர் போல் இருக்கின்றாயே. உன்னோடு தொடர்ந்து வரக்கூடிய பொருளாய தர்மத்தையேன் செய்யத் தயங்குகின்றாய்.? நாளை நாளை என்றிராதே.

"குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
உடம்போடுயிலிடை கட்கு."

பறவைக் குஞ்சு பருவம் வந்ததும் கூட்டைவிட்டு வெளியேறுவது போல உடம்பை விட்டு உயிர் வெளியேறும் நாள் தெரியாது.

கூடித்திரிந்த உயிர் கூடுவிட்டுப் போக உடல் தேடிச் சுடுகாட்டில் சேர்ப்பதற்கு - எமது உயிரெனக் கருதியவர்கள் காத்துக் கிடக்கிறார்கள் எனவே நல்லதை செய்து நாதனடி போற்றுதல் வேண்டும்.

மனம் போனவழி போகாமல் கோபத்தை நீக்கித் தானத்தைச் செய்ய வேண்டுமென்கிறார். அருணைப் பெருவள்ளல் அருணகிரியார் அடியார்க்கு உணவிட்டுப் பெருவாழ்வு பெற்ற மெய்யடியார்கள் பலர். அப்பூதி, பரஞ்சோதி - இளையான்குடி எனப்பலர்.

இயமனுக்கு ஒரு பெயர் தருமன் - தருமன் வாராமுன் தருமத்தை நாம் செய்து முடிக்க வேண்டும். தர்மத்தைச் செய்து இன்புற்று வாழ்வதுவும் பிறவிக்குக் காரணமாயமையும். எனவே மலபரிபாக நிலை பெற வேண்டும். அதற்குப் பற்றுக்கள் எல்லாவற்றையும் சிறிது சிறிதாக நீக்கப்பழகுதல் வேண்டும். அதற்கு வழி பற்றெல்லாம் நீக்கிய பரம் பொருளை இறைவனை நாம் பற்றிக் கொள்ள வேண்டும். எல்லாம் அவன் செயல் என்ற எண்ணம் மேலிட வேண்டும்.

**'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை**
**பற்றுக பற்றுவிடற்கு' என்பார் வள்ளுவர்**

பற்றற்றவனாகிய பரமனை நீ பற்றிக் கொள் மற்றைய உனது பற்றுக்கள் யாவும் தானாகவே விலகிவிடும்.

'பரமன் தந்தான். அவனடியார்க்கு இடுகின்றேன்' என்ற மனப்பக்குவம் வேண்டும் எம்பெருமானை இறுகப் பிடித்துக் கொண்டால் எம்மை விட்டு விலக முடியுமா? தாயினும் நல்ல தலைவரல்லவா? மாணிக்கவாசகர்.

**பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து நீ**
**பாவியேனுடைய, ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கி**
**உலப்பிலா ஆனந்தமாய, தேனினைச் சொரிந்து புறம்புறம்**
**திரிந்த செல்வமே சிவபெருமானே**
**யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்**
**எங்கெழுந் தருவதினியே.**

என்கிறார் - இறைவனை இறுகப்பிடித்தவர்
இப்படித்தானே கூறுவார்.

உற்றாராருளரோ உயிர் கொண்டுபோம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு
உற்றாராருளரோ.

மரணத்தின் பொழுது உயிர்த்துணை இறைவனே! அவனை இறுகப்பற்றிக் கொண்டால் துன்பமில்லை. இன்பமே.

---

# சந்தேகம் தெளிதல்

கேள்வி : வசதியில்லாத காரணத்தால் ஓரே அறையில் உள்ள வீட்டில் விடப்படுகின்றனர் புதுமணத் தம்பதிகள். அந்த அறை சுவாமி படங்கள் நிறைந்து காணப்படுகின்றது. அந்த அறையிலே தான் அவர்களது முதலிரவைக் கழிக்க வேண்டும். அவ்வாறு கழித்தால் பாவமாகுமா?

பதில் : கணவனும் மனைவியும் வாழ்வது பிழையன்று. 'இல்லறம் அல்லது நல்லறமன்று' என்கின்றார் ஔவையார். புதுமணத் தம்பதிகள் வாழ்கின்ற ஓரே ஒரு தனியறையில் இறைவனுடைய படம் இருப்பது பிழையன்று. அது நல்லதுங் கூட.

# சிவப்பேறு அளித்திடும் பஞ்சாட்சர மந்திரங்கள்

A.S இராதாக்கிருஷ்ணன் B.A DIP IN EDU
ஆசிரிய ஆலோசகர்

சிவனைப் பரம்பொருளாகக் கொண்ட சமயம் சைவசமயமாகும். சைவசமயத்தவரின் இறை வழிபாட்டில் சிவசின்னங்கள் முதன்மையானவையும், முக்கியமானவை யாகவும் கருதப்படுகின்றன. விபூதி உருத்திராக்கம், திருவைந்தெழுத்து என்பன சிவசின்னங்களாகவும் கொள்ளப்படுகின்றன. திருவைந்தெழுத்துக்களை பஞ்சாட்சர மந்திரங்கள் எனவும் அழைப்பர். 'நமசிவாய' 'சிவாயநம' 'சிவயசிவ' 'சிவசிவ' 'சி' என்னும் ஐந்து மந்திரங்களும் பஞ்சாட்சர மந்திரங்களாக உச்சரிக் கப்படுகின்றன. மானிடர்களின் பிறவித் துன்பங் களுக்குக் காரணமாக அமைபவை முற்பிறப்புக் களில் செய்த கன்ம வினைகளாகும். செய்த வினைப்பயன்களை ஆன்மாக்கள் அனுபவித் தேயாக வேண்டும். பிறவித்துன்பங்கள் ஆன்மாவைத் தொடரும் பொழுது உலகியல் துயரங்களின் அச்சத்துக்கு உள்ளாகின்றன. பார்க்குமிட மெல்லாம் நீக்கமற வியாபித்து நிற்கும் சிவபிரானே அவ் அச்சங்களைத் தீர்க்கக் கூடியவர். பிறவித்துயர் நீங்க அருமருந்தாக விளங்குபவரும் அவரே. ஒரு கால் நினைக்கின் இரு காலும் தோன்றி இன்னல்களைக் கலைத்திடும், கருணையு டையவர் எம்மையாளும் ஈசன். ஆகையால் அவனுடைய திருநாமமாகிய திருவைந் தெழுத்தினை ஓதித் துன்பத்தினை நீக்கி ஆன்மாக்கள் உய்வு பெற்றிடலாம் என்பது சைவ மரபாகும்.

திருவைந்தெழுத்து சிவனுடைய திருநாமமாகும். இதனை மெய்ப்பிக்கும் தன்மையில் திருஞானசம்பந்தர், தான் திருவாய் மலர்ந்தருளிய நமச்சிவாயத் திருப்பதிகத்தில் சிவபிரானின் திருநாமம் 'நமசிவாய' எனக் கூறியுள்ளார். இதனைக் "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்னும் தேவாரப் பாடலின் ஈற்றடியில் "நாதன் நாமம் நமச்சிவாயவே" எனப் பாடிய தன்மையிலிருந்து கண்டு கொள்ளலாம். இவ்விதமே திருநாவுக்கரசரும் "படைக்கலமாகவுன் நாமத்தெழுத்தஞ்செ‌ன் நாவிற் கொண்டேன்" என்றும் சுந்தரர் "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என்றும், மணிவாசகப் பெருமான் "நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க" என்றும் திருவுள்ளம் கனிந்து பாடிய பாடல்களின் பொருளுணர்ந்த தன்மையில் திருவைந்தெழுத்தே ஈசனுடைய திருநாமம் என்பதனை அறியக்கூடியதாகவுள்ளது.

மந்திரம் என்பது நினைப்பவனைக் காப்பது எனப் பொருள்படும். மந்திரங்கள் எல்லாவற்றிலும் பஞ்சாட்சர மந்திரமே தலை சிறந்ததாகும். 'நமச்சிவாய' என்னும் பஞ்சாட்சர மந்திரம் தூல பஞ்சாட்சரமாகும். 'சிவாயநம' என்னும் பஞ்சாட்சர மந்திரம் சூக்கும பஞ்சாட்சரமாகும். உலக இன்பத்தைப் பெற வேண்டின் (இம்மைப் பயன்) 'நமசிவாய' என்னும் மந்திரத்தையும், இறைவன் தாளின் கீழிருந்து அழியாத வீட்டின்பமுத்தி இன்பத்தைப் பெற வேண்டின் 'சிவாயநம' என்னும் பஞ்சாட்சர மந்திரத்தையும் ஓதிடல் வேண்டும். பஞ்சாக்கரம் ஒருவரின் மனப்பக்குவ

நிலைக்கேற்ற வண்ணம் தூலம், சூக்குமம், காரணம், மகா காரணம், மகாமனு, என ஐந்து வகையாய் விளங்குகின்றது. தூலம் - 'நமசிவாய', சூக்குமம் - 'சிவாயநம' காரணம் - சிவயசிவ; மகாகாரணம் - 'சிவசிவ' மகாமனு - 'சி' என அமைவு பெறுகின்றது. பஞ்சாட்சர மந்திரத்தினை உச்சரிக்கும் முறை மூவகையாகவுள்ளது. அவை முறையே மானசம், மந்தம், உரை என்பனவாகும். மானசம் என்றால் மனதினாலே உச்சரித்தலாகும். தன் செவிக்கு மாத்திரம் கேட்கத்தக்கதாக உச்சரித்தல் மந்தம் எனப்படும். இதனை உபாஞ்சு எனவும் கூறுவர். உரை என்பது பிறர் செவிக்குக் கேட்கத் தக்கதாகச் செபித்தலாகும். இதனை வாசகம் என்றும் கூறுவர். இம் மூன்று முறையான உச்சாடனங்களில் மானசம் மிகவும் சிறந்த முறையாகும். மானசமுறைமூலம் பஞ்சாட்சர மந்திரத்தினை செபிப்பது கோடி மடங்கு பலமினையும், மந்தம் முறை மூலம் செபிப்பது பதினாயிரம் மடங்கு பலமினையும் அளிக்கும் என்பர். சமய தீட்சை பெற்றவர்களே உண்மையான சைவசமயிகளாவர். இவர்களையே சைவசமயத்தவர்களென்று கருதுவர். சமய தீட்சை (சிவ தீட்சை) பெற்றோர் 108 அல்லது 50 அல்லது 25 அல்லது 10 உருவாயினும் நியமமாகத் தினமும் குருவை வழிபட்டுப் பஞ்சாட்சரமந்திரத்தினைச் செபித்தல் வேண்டும். திருவைந்தெழுத்தினைப் பாராயணம் செய்யும் பொழுது மனம், மொழி, செயல் மூன்றும் ஒருமைப்பட்டு இறையருள் பெற வழி வகுக்கின்றது.

ஸ்ரீ பஞ்சாட்சர மந்திரங்களில் தூலபஞ்சாட்சர மந்திரமாகக் கொள்ளப்படும் 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்து ஆன்மாக்களுக்குப் பாசங்கள் நீங்கும் பொருட்டுப் பிறப்பினைக் (உடல் பிறப்பு) கொடுத்து தொழிற்படுத்துவதாகும். 'நமசிவாய' என்னும் மந்திரத்தில் 'ந' என்பது திரோதன சக்தியையும் (மறைப்பு) 'ம' என்பது மலத்தையும், 'சி' என்பது சிவத்தையும் 'வ' என்பது அருட் சக்தி (திருவருள்)யையும், 'ய' என்பது ஆன்மாவையும் குறித்து நிற்கின்றது. திருவருட் சக்தியானது திரோதன சக்தியாக நின்று மலமானது உயிரை நீங்கும் பொருட்டு அம்மலத்தைத் தொழிற்படுத்தும். மறைத்தல் என்பது வினைப் போகங்களிலே அழுந்தச் செய்தலாம். அருளல் என்பது உயிர்களுக்கு மலத்தை நீக்கி சிவதத்துவத்தை அளித்தலாம். அழித்தல் என்பது ஆன்மாக்களின் இணைப்பை ஒழித்தற் பொருட்டாம். படைத்தல் மலபரிபாகம் வருவித்தற் பொருட்டாகும். காத்தல் வினைப்போகங்களை உண்பித்து வினைகளை ஒழித்தற் பொருட்டாகும். ஆன்மாக்களைத் துன்பத்துக்குக் காரணமான செனன மரண சாகரத்தினின்றும் எடுத்து அருள்புரிதல் காரணமாகவே இறைவன் ஐந்தொழிலைப் புரிகின்றார். இவ்விதம் 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்தானது இறைவனின் பஞ்சகிருத்தியத் தொழில்களை உணர்த்தும் தத்துவமாக விளங்குகின்றது.

இறைவனது மூர்த்தங்களில் ஒன்றாக அமையும் நடராசர் திருமூர்த்தமானது ஐந்தொழில்களின் தத்துவத்தினை உணர்த்தும் வடிவமாக அமைந்துள்ளது. இவ்வடிவத்துடன் 'சிவயநம' என்னும் பஞ்சாட்சர மந்திரம் தொடர்புபட்டுள்ளது. 'சிவயநம' என்னும் பஞ்சாட்சர மந்திரத்தில் 'சி' என்னும் அட்சரம் நடராச வடிவத்தின் உடுக்கை ஏந்திய கையைக் குறித்து நிற்கின்றது. இது இறைவனின் படைத்தல் தொழிலை உணர்த்துகின்றது. 'வ' என்னும் அட்சரம் நடராச வடிவத்தின்

அபயகரத்தினைக் குறித்து நிற்கின்றது.இது இறைவனின் காத்தல் தொழிலினை உணர்த்துகின்றது. 'ய" என்னும் அட்சரம் நடராச வடிவத்தின் தூக்கிய திருவடியைக் குறித்து நிற்கின்றது. இது இறைவனின் அருளல் தொழிலினை உணர்த்துகின்றது. 'ந' என்னும் அட்சரம் நடராச வடிவத்தின் தீச்சுடர் ஏந்திய கையைக் குறித்து நிற்கின்றது. இது இறைவனின் அழித்தல் தொழிலினை உணர்த்துகின்றது. 'ம' என்னும் அட்சரம் நடராச வடிவத்தின் ஊன்றிய திருவடியை (முயலகன் மீது ஊன்றிய பாதம்) குறித்து நிற்கின்றது. இது இறைவனின் மறைத்தல் தொழிலினை உணர்த்துகின்றது. இவ்விதம் பஞ்சாட்சர மந்திரமாகிய 'சிவயநம' என்னும் மந்திரம் நடராச வடிவத்துடன் தொடர்பு பட்டு அவ்வடிவம் உணர்த்தி நிற்கும் பஞ்சகிருத்திய தத்துவத்துடனும் இணைவு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறைவனாகிய சிவன் நடராச மூர்த்தத்தின் மூலம் ஆனந்தத்தாண்டவத்தினைப் புரிகின்றான். இவ்வானந்தத் தாண்டவச் செயற்பாட்டின் மூலம் ஐந்தொழில்களைப் புரிகின்றான். இறைவன் ஐந்தொழில்களைப் புரிவதன் நோக்கம் ஆன்ம கோடிகளாகிய மானிடர்களின் வினைப் பயன்களைப் போக்கி ஆன்ம ஈடேற்றமான முத்தி இன்பத்தினை அளிப்பதற்காகவேயாகும்.

இத்தகைய உன்னத திருவருட் செயற் பாட்டோடு திருவைந்தெழுத்தாகிய 'நமசிவாய', 'சிவாயநம' என்னும் மந்திரங்கள் இணைவு பெற்றுள்ளமையால் இம் மந்திரங்களை நியதியுடன் விதியமைப்பு முறைப்படி ஓதுவதினால் ஆன்மாக்களின் கன்ம வினைகள் நீக்கம் பெற்று சிவப்பேறு கிடைத்திட வழியுண்டாகின்றது. இதனை வலியுறுத்தும் தன்மையில் ஞான சம்பந்தரின் பின்வரும் நமசிவாயப் பதிகம் அமைகின்றது.

**'நந்தி நாமம் நமச்சி வாயவெனும்**
**சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்**
**சிந்தையா ன்மகிழ்ந்த தேத்தவல்லாரெலாம்**
**பந்த பாசம் அறுக்கவல் லார்களே!**

என்று சம்பந்தர் நமச்சிவாயப் பதிகத்தின் ஈற்றில் உயிர்களைப் பந்தித்து நிற்கும் மலங்கள் 'நமசிவாய' என்னும் சிவபெருமானுடைய திருநாமத்தை ஓதுவதனால் நீங்குமெனக் கூறுகின்றார். 'சிவயநம' என ஓதினால் பிறப்பு நீங்கிச் சிவத்தினைச் சார்ந்து மேல் நிலை எய்தும் பேறு ஆன்மாக்களுக்குக் கிட்டும். இதனை உணர்த்தும் தன்மையில் மாணிக்கவாசகர்

**'நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப் பெற்றேன்**
**தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்**
**தானே வந்ததென துள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்**
**ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே,**

என்று பகர்ந்திடுவதிலிருந்து முன் செய்த தவத்தின் பயனாலேயே குருவினிடமிருந்து 'சிவயநம' என்ற பஞ்சாட்சர உபதேசத்தைப் பெற்று அதன் மூலம் மேலான வீட்டின்பத்தினை அடைந்திட முடியும் என்பது உறுதியாகின்றது.

'சிவசிவ' என்னும் மகாகாரண பஞ்சாக்கரத்தினை ஓதுவதினால் அடங்கா மனமும் ஒடுங்கா உயிர்ப்பும் அடங்கி ஒடுங்கும். மெய்யறிவு பெற்ற மகான்கள் அறிவு நெறியில் நின்று ஒழுகும் நிலையினர் என்ற தன்மையில் 'சிவசிவ' என்னும் மகாகாரண பஞ்சாக்கரம் அவர்களுக்கு உரித்துடையதாகின்றது.

திருமந்திரப் பாடலில் திருமூலர் மகாகாரண பஞ்சாக்கரத்தினை ஓதுவதினால் சிவநிலையை எய்தித் திருவடி இன்பத்தினை அனுபவிக்கலாம். என அழகுற எடுத்துக் காட்டியுள்ளார். அப்பாடலினை நோக்குவோமாயின்

**'சிவசிவ என்கிலர் தீவினையாளர்**
**சிவசிவ என்றிடத் தீவினைமாளுஞ்**
**சிவசிவ என்றிடத் தேவருமாவர்**
**சிவசிவ என்னச் சிவகதி தானே'** என்கிறார்.

அதாவது திருவருளின் துணையால் 'சிவசிவ' என்று ஓதாதவர்கள் தீவினையாளர்கள். அத் தவறினை உணர்ந்து அதனை ஓதினால் தீவினைமாளும். இடையறாது ஓதினால் தேவராவர். 'சிவசிவ' என்று மேலும் ஓதினால் சிவநிலை எய்தித் திருவடி இன்பத்தினை அனுபவிப்பர், என்பதே இத்திருப்பாடலின் பொருளாகும். அப்பர் சுவாமிகளும் 'சிவசிவ' என்று எப்பொழுதும் ஓதுவதினாலும், திருமுறைகளை எந்நேரமும் பாடுவதனாலும் சிவ கதியைப் பெற்றிட வழியுண்டு எனக் கூறி நிற்பதுவும் நோக்கத்தக்கதாகும். மகா காரண பஞ்சாக்கரமாகிய 'சிவ' என்பதில் வகரமாகிய அருளையும் சிகரம் தன்னுள் அடக்கிக் கொண்டு சிகரமாகிய எழுத்து மாத்திரமே தனித்து 'சி' என நிற்பதே மகாமனு பஞ்சாக்கரம் எனப்படுகின்றது. இது இறை எழுத்து எனவும், பெருவெழுத்து எனவும், நாயோட்டு மந்திரம், பிரமபீசம் எனவும் கூறப்படுகின்றது.

இப் பஞ்சாக்கரத்தினை ஓதுவதினாலும் மலங்கள் நீங்கி திருவருள் பேறாகிய முத்தியின் பத்தினைப் பெற்றிட முடியும். காரணமாகிய 'சிவயசிவ' பஞ்சாக்கரத்தினையும் ஓதுவதால் ஆன்மாக்களைப் பந்தித்து நிற்கும் மலபந்தங்கள் நீங்கப் பெற்றுத் திருவருள் கைகூடி வந்து ஆன்ம ஈடேற்றம் கிட்டும் என்பதும் குறிப்பிடத் தக்கது. எனவே பஞ்சாட்சர மந்திரங்கள் ஓதுவதினால் மலபந்தங்கள் நீக்கம் பெற்றுச் சிவகதி கிடைக்கும் என்பது புலனாகின்றது. மரண அச்சத்தினைப் போக்கவல்லது பஞ்சாட்சர மந்திரமாகும். மன அமைதியினையும், மனச் சாந்தியையும் அளித்து உளத் தூய்மையி னையும் ஏற்படுத்தவல்லது உலகப்பற்றுக்களை நீக்கி இறைப்பற்றினை ஏற்படுத்தி அகத்தினிலே இறைசிந்தனையை ஏற்படுத்த வல்லவையும் பஞ்சாட்சரமந்திரங்களேயாகும். எனவே மானிடர்களாகிய நாமும் பஞ்சாட்சர மந்திரத்தின் மகிமையை உணர்ந்து அவற்றினை நியதியுடன் ஓதிப் பயனினைப் பெறுவதற்கு வகை கண்டிடல் வேண்டும். சைவ சமயிகளாகிய நாம் எமது சமயத்தின் அடையாளச் சின்னங்களாகத் துலங்கும் சிவ சின்னங்களின் தாற்பரியத்தினை நன்குணர்ந்து அவற்றினை உரிய வகையில் அணிந்தும் செபித்தும் வாழ்வியலில் இக, பரப் பயன்களைப் பெற்றிட முனைந்திடுவோம். அந்த வகையில் பஞ்சாட்சர மந்திரங்களின் பொருள் உணர்ந்து அவற்றினை உள்ளம் உணர்ந்து ஓதிப் பயன் பெற்றிடுவோம். அவற்றினை ஓதுவதனால் சிவப்பயன் கிடைத்திடும்; எல்லாம் சிவமயமாகிவிடும், என்ற உண்மையினை உணர்ந்து செயற்படுவோம்.

**உசாத்துணை நூல் :**

**முப்பொருள் உண்மை விளக்கம்**

**மு. இளையதம்பி**

# சைவத்தின் மேன்மையும் சைவ வாழ்வும்

நாச்சிமார் கோயிலடி சிவநெறிக்கலாநிதி
**இராசையா ஸ்ரீதரன்**

இப்பரந்த நிலவுலகின் கண்ணே எத்தனையோ சீவராசிகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அத்தனையும் ஏதோ ஒரு விதத்தில் உண்டு உறங்கிக் காலங் கடத்துகின்றன. ஆனால் ஒவ்வொன்றும் ஓவ்வொரு வகையில்,

மனிதப்பிறவி எடுத்த மானிடனும் ஜீவிக்கின் றான். ஆனால் அவனுக்குப் "பகுத்தறிவு" எனப்படுகின்ற ஆறாம் அறிவு இருக்கின்றது. அதிலிருந்து அவன் மற்ற எல்லா ஜீவராசிகளினின்றும் வேறுபடுகின்றான்.

ஆகவே மனிதன் மனிதப் பண்புகளுடன் மனிதனாக வாழுதல் வேண்டும். மனித உருவில் இருந்து கொண்டு மிருகமாக வாழக் கூடாது. மனிதன் முதலில் தன்னைத்தானே சிந்தனையில் தராசு போட்டு நிறுக்க வேண்டும்.

நான் இந்த உலகில் மனித ஜென்மம் எடுத்து வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இதைத் தந்தவன் யார்? ஏன் தந்தான்? எதற்காகத் தந்தான்? இதன் தாற்பரியம் என்ன? நான் யார்? இந்த உலகில் பிறவி எடுத்து வந்திருக்கின்றோமே; இதை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? என்று நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

புடம் போட்ட தங்கமானது புத்தொளி வீசிப் பிரகாசிப்பது போல மனிதன் சிந்திக்கச் சிந்திக்க அனுபவ அறிவும் அங்கே சுடர் விடத் தொடங்கும். அந்த அனுபவத்தின் வெளிப் பாட்டில் ஒரு தெளிவு பிறக்கும்.

மனிதன் உண்மையில் மனிதப் பண்புகளுடன் வாழ வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக ஒருவன் இருக்கின்றான். அவன் தான் இறைவன். அவன் இந்த மானிட உடம்பைத் தந்தது பூமியின் மேல் மனிதனாக வாழ்வதற்கே. ஆகவே, நாங்கள் மனிதப் பிறவியின் மகத்து வத்தை உணர்ந்து நல்லவற்றை எண்ணி, நல்லனவற்றைச் செயற்படுத்தி, நல்லவர்களோடு சேர்ந்து நன்மைகளைச் செய்ய வேண்டும். நல்லாரைக் காண்பதும் நன்றே; நல்லார் குணங்கள் உரைப்பதும் நன்றே; என்றபடி நாங்கள் நம்மை நாமே திருத்திக் கொள்ள வேண்டும். கெட்டவர்களோடும் தீயவர்களோடும் உறவுகளைத் துண்டித்துக் கொள்ள வேண்டும்.

நன்மைகள் செய்து நல்லபடி வாழ்வதற்கு இறைவன் எந்நேரமும் துணை நிற்பான். நாம் அவனுக்குத் தொண்டுகள் செய்ய வேண்டும்

இறைவன் இருக்கும் இடம் கோயில். அங்கு சென்று அவனை வழிபாடு செய்ய வேண்டும். வாயார மனமார வாழ்த்தித் துதிக்க வேண்டும். நாயன்மார்கள் காட்டிய பாதையிலே நாமும் செல்ல வேண்டும். இப்படித்தான் வாழ வேண்டும் என்று சைவப் பெருமக்கள் வாழ்ந்து காட்டிப் போயிருக்கின்றார்கள். கையில் பணம் இருந்தால் போதும். எப்படியும் வாழலாம் என்பது முற்றிலும் தவறான செயல்.

எப்போதும் உண்மை பேசி நேர்மையே நிறைந்த செல்வம் என்பதை மனதில் நிலை நிறுத்தி, பிறர் மனம் நோகாமல் இன் சொல் பேசி, மற்றவர்களுக்கு எம்மாலான மட்டும் உதவிகள் செய்து, அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரக் கூடிய செயற்பாடுகளிலீடுபட்டு நாங்கள் வாழ்தலே சிறந்த பயனை அளிக்கவல்லது.

இவ்வாறு நாங்கள் எல்லோருமே வாழத் தலைப்பட்டால் பிரச்சனைக்கே இடமிருக்காது. அனைவரும் சந்தோஷமாக வாழலாம். மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து நாங்கள் வாழும் போது அவர்களுக்கும் நல்லுணர்வு பிறக்கும். தீயன மறைந்து விடும். தானாகவே வந்து, "உங்களுக்கு ஏதாவது உதவிகள் தேவைப்பட்டால் சொல்லுங்கள் நான் உதவு வதற்குச் சித்தமாக இருக்கின்றேன் என்றென்றும் காத்திருக்கின்றேன்." என்று வருவார். அன்று முதல் நட்புறவு வலுப் பெறும். சிநேகிதம் மலரும் உண்மையான அன்பு அடி அத்திவாரம் இட்டு விடும்.

ஆகவே, வாழ்க்கையில் அன்று முதல் நன்மைகள் செய்வதற்கு ஆரம்பித்துவிடுவோம். அவ்வாறு நாம் நல்ல முறையில் நமது

வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுவதற்கும் ஆண்டவனின் அனுக்கிரகம் வேண்டும். அந்த அனுக்கிரகத்தை அடைவதற்கு ஆண்டவரைத் துதிக்க வேண்டும்.

சிலர் சொல்லுகின்றார்கள். கடவுள் ஒருவர் இருக்கின்றாரா? அப்படி இருந்தால் அவரைக் கோவிலில் போய்த்தான் வழிபட வேண்டுமா? வீட்டில் இருந்தே கும்பிட்டால் என்ன? அவரது வடிவம் என்ன? இவையனைத்தும் அவர்களுடைய கூற்றுக்கள்.

ஒரு பசுமாட்டிலிருந்து பாலைப் பெற வேண்டுமாக இருந்தால் செவியைப் பிடித்து இழுத்தால் பால் சுரக்குமா? பசுவின் மடியைப்பிடித்திழுத்தால்தான் பால் கிடைக்கும். அது போலத்தான் இறைவனும். அவன் எல்லா இடமும் நீக்கமற நிறைந்திருந்தாலும் ஆலயத்தில் தான் அருளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

**'ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவபூசை பண்ணாய்**
**நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய்**
**சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்**
**மனமே உனக்கென்ன வாய்'**

என்றபடி நாம் பூவுலகில் பந்தபாசத்தினால் கட்டுண்டு அன்பு வலையில் அகப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின் றோம். ஆகவே, நம்மை நாம் முதலில் திருத்திக் கொள்ள வேண்டும். ''உனது காலில் ஓர் முள் குத்தி விட்டால் உடனே ஓ வென்று அலறித் துடிக்கும் நீ மற்றவர்களுக்கும் அப்படித்தானே இருக்கும் என்று ஏன் சிந்திக்கின்றாயில்லை. உன்னைத் திருத்து; உலகம் தானே திருந்திவிடும்' என்று ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சர் கூறுகின்றார்.

நமது சிந்தனைகளை நல்ல வழியிற் செலுத்தி அதன் மூலமாக நன்மைகளை அடைவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். மேடையில் அழகாகப் பேசிவிட்டு வாழ்க்கையில் தவறாக நடத்தல் கூடாது. விளக்குமாறு, தான் சுத்தமாயிருக்காது. மற்ற இடங்களைச் சுத்தமாக்கும். மேடைப் பேச்சாளர்கள் அநேகர் இப்படித்தான் இருக்கின்றார்கள். அவ்வாறு மற்றவர்களுக்கு உபதேசம் செய்துவிட்டுத் தான் பிழையாக நடத்தல் நியாயமன்று. மாமிசம் உண்ணாமல் சைவமாக வாழ்கின்ற ஒருவரால் தான் மற்றவர்களைப் பார்த்து மாமிசம் புசிக்காதீர்கள் என்று அடித்துச் சொல்லமுடியும். தானே மச்சத்தைத் தின்று கொண்டு பிரசங்கம் செய்வதில் அர்த்தமே இல்லை.

நாங்கள் சைவசமயம் என்று சொல்லிக் கொண்டு உண்மைச் சைவர்களாக வாழ்தல் வேண்டும். சைவக் கோட்பாடுகளையும் சைவக் கொள்கைகளையும் கட்டாயமாகக் கடைப் பிடித்தல் வேண்டும். அங்ஙனமில்லாமல் வெறுமனே வெளிப்பூச்சுக் காட்டி வாழ்வதில் பயனேது மில்லை.

'உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது', 'வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனைய உயர்வு' என்பதற் கிணங்க நாம் உள்ளத்தைச் சுத்தமாக்கிக் கொண்டால் அங்கே ஆண்டவன் எழுந்தருளிவிடுவான்.

'உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்' 'காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக' என்றபடி நமது உள்ளத்திலே இறைவனை இருத்தி உறையச் செய்துவிட்டால் வெற்றி நமக்குத்தான். ''அன்பே சிவம்'' என்பது அமுதவாக்கு.

பூசலார் நாயனார் எவ்வாறு உள்ளக் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் நடத்தினார் என்பதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முக்கியமாகப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நல்லவர்களாக, நல்ல பண்புள்ள பிள்ளைகளாக வளர்க்க அவர்களுக்கு நல்லன வற்றை எடுத்துரைத்தல் மிகமிக அவசியம். ''நீறில்லா நெற்றி பாழ்'' என்று சொல்லித் திருநீறு பூசுகின்ற பழக்கத்தை நாம் தான் ஏற்படுத்த வேண்டும். சைவசமய சின்னத்தை அணிவதற்குத் தயக்கம் காட்டுதல் கூடாது.

'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்றமாதிரி நாங்களும் 'சைவன் என்று சொல்லடா சைவசமயமேன்மையைக் காட்டடா' என்று புதுமொழியை நாம் கற்பித்து வாழ்வில் மேன்மையடைய முயற்சிக்க வேண்டும். சைவசமய முறைப்படி வாழ்ந்து சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக!

உ

# நினைவிற் கொள்வதற்கு

பார்த்திப

தை

| | | | |
|---|---|---|---|
| 01. | 14-01-2006 | சனி | தைப்பொங்கல் பூரணை விரதம் |
| 05. | 18-01-2006 | புதன் | சங்கடஹரசதுர்த்தி விரதம் |
| 06. | 19-01-2006 | வியாழன் | சண |
| 11. | 24-01-2006 | செவ்வாய் | திருநீலகண்டர் கு |
| 14. | 27-01-2006 | வெள்ளி | பிரதோஷ விரத |
| 16. | 29-01-2006 | ஞாயிறு | அமாவாசை வி |
| 18. | 31-01-2006 | செவ்வாய் | அப்பூதியடிகள் கு |
| 19. | 01-02-2006 | புதன் | சதுர்த்தி விரதம் |
| 21. | 03-02-2006 | வெள்ளி | ஷஷ்டி விரதம் கலிக்கம்பர் குருபூசை |
| 24. | 06-02-2006 | திங்கள் | கார்த்திகை விரதம் |
| 26. | 08-02-2006 | புதன் | கண்ணப்பர் குருபூசை |
| 27. | 09-02-2006 | வியாழன் | அரிவாட்டாயர் குருபூசை |
| 28. | 10-02-2006 | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| 29. | 11-02-2006 | சனி | தைப்பூசம் |
| 30. | 12-02-2006 | ஞாயிறு | பூரணை விரதம் |

Registered as a NewsPaper at the G.P.O.

உ
சிவமயம்

## புத்தக விற்பனை

- ...ளாம் ...ம. க. ...பிள்ளை (...த்தி...)
- ...வது எப்படி?
- ...வாசகம்
- Understanding Saiva ... Philosophy
- And Outline of Saivism
- ...
- தில்லை ஆதீன முதல்வர் நற்சாதம்
- சைவபோதம் 1ஆம் புத்தகம்
- சைவபோதம் 2ஆம் புத்தகம்
- சைவ மகத்துவ...
- சைவசமய சாரம்
- கந்தபுராண விளக்கம்
- ... (ஒரு கிறிஸ்தவ ...ளருக்கான மறுப்புரையும்)
- ...னுடைய திருப்பெருவடிவம்
- ... (மூலமும் உரையும்)
- ...க்கிற் சைவக் கிரியைகள்

...க்கு உண்டு

...அச்சகம்
... ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.


எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக் குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச் சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங் கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்து விளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

**கலையரசி**
23/1, விவேகானந்த மேடு,
கொழும்பு-13. தொ. பே: 2478885


## சைவநீதி மாத இதழ்

பெறுமதி விபரம்

தனிப் பிரதி ரூபா 25.00
ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

*சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.*


சந்தா அனுப்பவேண்டிய முகவரி
*C. Navaneethakumar,*
*No. 30, Ramya Road,*
*Colombo - 04.*
*Sri Lanka.*
*Tel : 2580458*



Regd No. QD/27/News 2005 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.